317

உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும்பிரசுரமாகும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௧௦.] பரிதாபி ஹூ சித்திரைமீ [பகுதி-௬

உள்ளுறை.

காவியம்:—பத்திராதிபர். ௨௬௧
கவிசித்தாந்தம்:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௨௬௬
நச்சினார்க்கினியர்:— ,, எஸ். சாமிநாதையர். ௨௭௧
நாலடியா ராராய்ச்சி:- ,, டி. எஸ். குப்புஸ்வாமிசாஸ்திரிகள். ௨௮௧
வானசாஸ்திரம்:— ,, சோமசுந்தரதேசிகர். ௨௮௮
சைவாகமமிருபத்தெட்டு:—,, மு. சபாரத்தின ஐயர். ௨௯௭
ஐயவினாவுக்கு விடை:-,, அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௩௦௩
கையறுநிலை:— ,, எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர். ௩௦௪
புத்தக வரவு:—பத்திராதிபர். ௩௦௭
அகப்பொருள் விளக்க மூலமுமுரையும்:— ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைத்தேவர். [illegible]
புதுவருஷவருகை:— ,, வே. முத்துசாமி ஐயர்.
ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சி விவரம்:— தமிழ்ச் சங்கம பிரசிடெண்ட்.
மதுரைத் தமிழ்ச்சங்கத்து வரவுசெலவு கணக்குமுதலியன:—

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1912. [தனிப்பிரதி அணா-8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

கொனோசன்.

வெட்டையைப் போக்கடிக்க இது ஒரு

கைகண்ட மருந்து.

40 காப்ஸல்ஸ்களுள்ள பாட்டில்கள்.

கோனேசன் சீக்கிரம் எரிச்சலுண்டாவதையும் கோரே நிமிர்ச்சியையும் தணிக்கிறது இது தான் மிகவும் மேலான மருந்து இது இலைரக்குடலைத் தொந்தரவுசெய்யாமலும், அருவருப்பையும் வாந்தியையும் உண்டாக்க மாட்டாதுந் தவிர குண்டிக்காய்க்குறியில் எரிச்சலுமுண்டுபண்ணுது. அநேக வைத்தியர்களிடமிருந்து நற்சாக்ஷி பெற்றுள்ளது. **15**-மணி நேரங்களில் சொஸ்தமாகிறது.

HOLY MULLER & SCHMIDT,

7, Colootola Street,

CALCUTTA.

Stocked by:—

T. V. GEORGE & CO.,

CHEMISTS,

WADURA.

☞ எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுத வேண்டுகிறேன். [4]

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-க௦.] பரீதாபி ஹூ சித்திரைமீ [பகுதி-கூ

காவியம்.

காவியமென்பது கவியாற்றொடுக்கப்படும் சொற்பொருட் டொகுதியாம். கவி - புலவன். தானெடுத்துக்கொண்ட பொருளைச் சாதுரியத்தால் வருணித்துக்கூற வல்லவன்யாவன்? அவனே கவி; எனக் கவியென்னுஞ் சொல்லுக்குப் பொருள்கூறுவர். சாதுரியம்-சதுரப்பாடு; அதாவது நால்வகைவன்மையுமுடைமை. அவ் வன்மையுடையார் ஆசுகவியும், மதுரகவியும், சித்திரகவியும், விஸ்தாரகவியுமென நான்கு திறத்தினராகப் பகுக்கப்படுவார்.

"ஆசுகவியென்பான் எடுத்தபொருளும், அடுத்தசொல்லும், தொடுத்ததொடையும் வழுவாமற் கடுத்துப்பாடுவான்; இவனைக் கடுங்கவியென்றுங் கூறுவர்;" எனவும்,

"மதுரகவியென்பான் சொல்வளமும், பொருட்பெருமையுமுடைத்தாகத் தொடையுந் தொடைவிகற்பமும் துதைந்து உருவக முதலாகிய வலங்காரங்களை யுட்கொண்டு ஓசைப்பொலிவுடைத்தாய் உய்த்துணரும் புலவர்களுக்கு ஒலி கடலமுதம்போன் றின்பம்பயக்கப் பாடுவான்; இவனை இன்கவியென்றுங் கூறுவர்;" எனவும்,

சித்திரகவி யென்பான் மாலைமாற்று முதலாகிய அருங்கவிபாடுந் தன்மையுடையான்; இவனை அருங்கவியென்றுங் கூறுவர்;" எனவும்,

"வித்தாரகவியென்பான், மும்மணிக்கோவையும், பன்மணிமாலையும், மறமும், கலிவெண்பாவும், மடலூர்ச்சிமுதலாகிய நெடும்பாட்

*

டும், கோவையும், பாசாண்டமும், கூத்தும், விருத்தமும், கதைமுத லாகிய செய்யுளும் இயலிசைநாடகங்களோடும் காவியநூல்களோடும் பொருந்தப்பாடும் பெருங்கவியாம்." எனவும் யாப்பருங்கலவிருத்தி யுரைகாரர் கூறுவர்.

அன்றியும், சாதுரியம் - சதுரப்பாடு; (நால்வகைவன்மை) என் பதை யுபலக்ஷணமாகக்கொண்டு (காவியத்துக்குவேண்டும்) பலவகைத் திறமையுங்கொண்டு செய்யப்படுவது காவியமெனப் பொருள்கொள் ளினும் பொருந்தும்.

அத் திறமையாவன:—எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, சுவை, தொனி, குணம், குற்றம், உத்தி முதலியவற்றின் இலக் கணவகைகளையும், நிகண்டு, காவியம், அறநூல், நீதிநூல், நியாய நூல், சரிதநூல், சமயநூல், தத்துவநூல் முதலிய பல இலக்கியவகை களைவும் பிறகலைகளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவுணர்ச்சியும், இயற்கையறிவும், உலகநடையுணர்வும், சொல்வன்மையும் முதலியபல வகைத் திறமைகளுமாம்.

இத் திறமைவாய்ந்த புலவனு வினியசொற்பொருளும், செவிக் கினிய தொனியும், அணியும், சுவையும், வனப்பும், ஆழ்ந்தபொருளு முதலிய பல நயங்களுடையதாய்க் கேட்போர் வியந்துவக்குமாறு செய்யப்படுவது காவியமென்று சொல்லப்படும்.

அன்றியும், குற்றமற்றனவும், குணமுள்ளனவும், அலங்கார முடையனவுமாகிய சொற்பொருட்டொகுதியே காவியம்; எனக் காவி யத்திற்கு இலக்கணஞ்சொல்லப்பட்டிருக்கிறது.

குற்றமாவது சொற்பற்றியும் பொருள்பற்றியும் வழுவியலுட் காணத்தகும் அப்ரயுக்தம் (வழக்கொழி சொற்றொடை) முதலியவாம்.

குணமாவது குணவியலுட் காணத்தகும் சிலேஷம் (ஒருநிகர் சொற்றொடை) முதலியவாம்.

அலங்காரமாவது அணியியலுட் காணப்படும் மூரண், மடக்கு முதலிய சொல்லணிவகையும், உவமை முதலிய பொருளணிவகையு மாம்.

ஆகவே குணமும் அணியும் விரவியமையப்பெற்ற குற்றமற்ற சொற்பொருட்டொகுதியே காவியமெனக் காவியத்துக்கு இலக்கணங் கூறியவாறாயிற்று.

அன்றியும் சொற்பொருட்டொகுதியை யுடலாகவும், தொனிப் பொருளை உயிராகவும், உவமைமுதலிய அணிவகைகளை ஆரமுதலிய ஆபரணங்களாகவும், சிலேஷமுதலிய குணங்களை சௌரியமுதலிய குணங்களாகவும், வைதர்ப்பியம் முதலிய ரீதிகளை மேம்பாடுடைய ஒழுக்கநடையாகவும், கைசிகீமுதலி விருத்திகளைத் திருந்திய செயல் களாகவும், கொண்டுகூட்டற்ற கிடக்கைமுறையைப் படுக்கையாகவும், பாகம்போலச் சுவையூட்டும் திராக்ஷாதிபாகங்களைப் பாகமாகவுங் கொண்டு, லோகோபகரணங்கள்போலக் காவியத்துக்கும் பல உபகர ணங்கள் உண்டென்று சொல்லப்பட்டிருக்கின்றன.

காவியத்துக்கு உடலாகச்சொல்லப்பட்ட சொற்களை வாசகம், லக்ஷகம், வியஞ்சகம் என மூன்றுவகையாகப் பிரித்திருக்கின்றனர்.

அவற்றின் பொருள்களுக்கு முறையே வாச்சியம், லக்ஷ்யம், (இலக்கியம்) வியங்கியம் எனப் பெயரிட்டிருக்கின்றனர். அவற்றின் விருத்திகளும் முறைய அபிதை, இலக்கணை, வியஞ்சனை யென வழங் கப்படுகின்றன.

அவற்றுள் வாசகமாவது இச்சொல்லால் இப்பொருளுணர்த் துகவென்னும் சங்கேதமுள்ளனவாய் உலகவழக்கினும், நிகண்டுமுத லிய நூல்களிலும் வழங்கப்பட்டுவருஞ் செஞ்சொற்களாம். உதார ணம்—“பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை, நாலுங் கலந் துனக்கு நான்றருவேன்,” என்பதன்கண்ணுள்ள பால்முதலியன போல்வன. இவை தமிழிற் செஞ்சொல்லெனப் பெயர்பெறும். இச் சொல்லானுணர்த்தப்படும் பொருளே வாச்சியம் என்னுஞ் செம்பொ ருளாம். இச் சொற்பொருள்களுக்குள்ள சம்பந்தமே அபிதையென் னும் விருத்தியாம்.

லக்ஷகமாவது வாச்சியப்பொருட்குப் (செம்பொருட்கு) பொ ருத்தமில்லாதவிடத்து அப்பொருளின் சம்பந்தமுடையதாகிய பொ ருத்தமுள்ள பிறிதொருபொருளை யுணர்த்துஞ்சொல்லாம். உதார

ணம்—"ஊரெல்லாந்துஞ்சி யுலகெல்லா நள்ளிருளாய்" என்பதில் ஊர் என்னும் சொல்லின்பொருளாகிய இடவிசேடத்துக்குத் துஞ்சுத லோடு பொருட்பொருத்த மின்மையாற் பொருத்தமுடைய மக்கட் டொகுதியை யுணர்த்திநிற்கும் ஊர் என்னுஞ்சொல் இங்கு லக்ஷக மாயிற்று. இவ்வாறே "படைகுடிகூழமைச்சுநட்பாணறு, முடையா னரசருளேறு." என்பதனுள் ஏறு என்பதுபோல உபசாரவழக்காக வருவனவும், உபலக்ஷணமாக வருவனவும், ஆகுபெயராயுள்ளனவும் லக்ஷகமாமாறு கண்டுகொள்க. இச்சொற்களைத் தமிழ்நூலார் இலக் கணைச் சொல்லென்று வழங்குவர். இச் சொல்லாலுணர்த்தப்படும் பொருள் (லக்ஷ்யம்) இலக்கியம் எனப்படும். இச்சொற் பொருள்களுக் குள்ள சம்பந்தமே இலக்கணையென்னும் விருத்தியாம்.

வியஞ்சகமாவது வாச்சியப்பொருளுக்குப் (செம்பொருளுக்கு) பொருத்தமுள்ளவிடத்தும் கவி(புலவன்)கருதிய பிறிதொருபொருளை யுணர்த்துஞ் சொல்லாம். அச் சொல்லாலுணர்த்தப்படும் பொருளே வியங்கியமெனப் பெயர்பெறும் தாற்பரியக்குறிப்பாம். இச் சொற் பொருள்களின் சம்பந்தமே வியஞ்சனையென்னும் விருத்தியாம்.

வியஞ்சகம் ஒருமொழியுந் தொடர்மொழியுமென விருவகைப் படும். அவற்றுள் ஒருமொழி வியஞ்சகத்துக்கு உதாரணம்:— "ஒழுக்கமுடையவர்க்கொல்லாவேதீய, வழுக்கியும் வாயாற் சொலல்" "இழுக்கலுடையுழி யூற்றுக்கோலற்றே, யொழுக்கமுடையார் வாய்ச் சொல்" என்பவற்றுள் வாயென்னும் ஒருமொழி, தீயசொற் பயிலாத தென்னும் தாற்பரியப் பொருளுணர்த்தலால் வியஞ்சகமாயிற்று. இவ்வாறுணர்த்தப்படும் தாற்பரியப் பொருளே வியங்கியமெனப்படும். இச்சொற் பொருள்களுக்குளதாகிய சம்பந்தமே வியஞ்சனை யென் னும் விருத்தியாம்.

இனித் தொடர்மொழிக்கண் வியஞ்சகமாமாறு:— செல்லாமை யுண்டேலெனக்குரைமற்றுநின், வல்வரவுவாழ்வார்க்குரை." என்ப தில், செல்லின் இறந்துபடும்; என்பது வியங்கியப் பொருளாதலால் அதனை யுணர்த்திநிற்கும் வாழ்வார்க்குரை யென்னுந்தொடர்மொழி வியஞ்சகமாயிற்று. இவ்வாறே "நன்றறிவாரிற்கயவர் திருவுடையர், நெஞ்சத்தவலமிலர்" என்பது போன்ற குறிப்புக்களும், செவ்வ

னிறையில்லாத பொருண்மையினேரும் விடைகளும், சோறிட வேண்டு மென்னுங் கருத்தால் வயிறுபசிக்கிறது என்று கூறுவது போன்ற குறிப்பு மொழிகளும், பிறவும் வியங்கியப் பொருள்குறித்து வழங்குவன வெல்லாம் வியஞ்சகமாம்.

இங்ஙனம் வியஞ்சகச் சொற்களாலுணர்த்தப்படும் வியங்கியப் பொருளே காவியத்துக்கு உயிரென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அன்றியும், வாச்சியப்பொருளிற் (சொற்பொருளில்) சிறந்த வியங்கியப் பொருளையுடைய காவியம் உத்தமகாவியமென்றும், அது தொனியென்னும் பெயர் பெறுமென்றும்; வாச்சியப்பொருளினொத்த அல்லது தாழ்ந்த வியங்கியப்பொருளையுடைய காவியம் மத்திமகாவியமென்றும், அது குணீபூத (அப்பிரதான) வியங்கியமெனப் பெயர் பெறுமென்றும்; வியங்கியப்பொருள் தோன்றாத காவியம் அதமகாவியமென்றும், அது சித்திரமெனப் பெயர்பெறுமென்றும் முதலிடை கடையென்னும் வேறுபாட்டாற் காவியங்கள் மூன்று வகையாகப் ப்குக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றுள், தொனியென்னும் உத்தம காவியத்துக்குதாரணம்:— * "நனையகாஞ்சிச்சினையசிறுமீன், யாணரூரன்" என்பதாம். இது, "பூவும்புலாலுமொக்கவிளையுமூரன்" என்னுங்குறிப்புப் முதலிற் பொருளுணர்த்த அக்குறிப்பால் "குலமகளிரைப்போலப்பொதுமக ளிரையுங் கொண்டொழுகுவான்" என வாச்சியப்பொருளி லடங் காத தலைமை வாய்ந்த வியங்கிப்பொருள் தோன்றுமாறு காண்க.

---

* வாழி யாதன் வாழி யவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
வெனவேட் டோளே யாயே யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாண ரூரன் வாழ்க
பாணனும் வாழ்க வெனவேட் டேமே.

ஐங்குறுநூறு. க-ஆம் பாட்டு.

மற்றும், இவ்வாறே, † "பூத்தகரும்பிற், காய்த்தநெல்லிற்கழனி யூரன்" என்பது பூத்துப்பயன்படாக் கரும்பினையும், காய்த்துப்பயன் படும்நெல்லினையு முடைய ஊரன் என்னுந் தாற்பரியக்குறிப்பால் "ஈன்றுபயன்படாப் பொதுமகளிரையும், மகப்பயந்துபயன்படுங் குல மகளிரையும் ஒப்பநினைப்பான்" என்னும் வியங்கியப்பொருள்தோன்ற நின்றவாறு கண்டுகொள்க.

இங்ஙனம் பலவாறுகத்தோன்றும் தொனிவகைகளை எண்ணித், தனிமையில் (ருக) பேதமும், சேர்க்கையில் (கஙஉசு) பேதமும், சேர்க் கைக்கலவையில் (ருஙoச) பேதமுமுண்டென்று தொனிநூலுடை யார் கூறுகின்றனர். இத் தொனிவகைகளெல்லாம் அகப்பாட்டும் புறப்பாட்டுமாகிய சங்கமருவிய நூல்களிலும், பிற சான்றோர் செய் யுட்களிலும் இடையிடையே விரவிவரப்பெறுவன. இவைபெரும் பாலும் அகப்பாட்டில் இறைச்சிப்பொருள்பற்றியும், "திருப்பாவை" "திருவிருத்தம்" "திருவாய்மொழி" முதலிய திவ்யப்பிரபந்தங்களில் ஸ்வாபதேசப் பொருள்பற்றியும், மற்றும் கவிகருதிய வேறுபல உள் ளுறைப் பொருள்பற்றியும் வருவன.

இனி மத்திமகாவியத்திற்குதாரணம்:—

(அகப்பாட்டில் தலைவனது புறத்தொழுக்கங்கண்ட தலைமகள் தலைவனிடம் அவன் காமக்கிழத்தியைக் கண்டமைகூறுமிடத்து) "வானத்து, அணங்கருங்கற்பினன்ஞேணின், மகன்ருயாதல்புரை வது." என்பதாம். இதில் அருந்ததிபோலும் கற்புடைய அவள் உன் மகனுக்குத் தாயாயிருத்தல் தகுமென்றமையால் நீ அவளுடன்

---

† வாழி யாதன் வாழி யவினி
பகைவர்புல் லார்க பார்ப்பா ரோதுக
வெனவேட் டோளே யாயே யாமே
பூத்த கரும்பிற் காய்த்த நெல்விற்
கழனி யூரன் மார்பு
பழனமா கற்க வெனவேட் டேமே

ஐங்குறுநூறு. ச-ஆம் பாட்டு.

கூடிக்கலவியின்பந் துய்த்தனேயென்பது வியங்கியபொருளாம். இப் பொருள் நின்மகனுக்குத் தாயாயிருத்தல் தகுமென்னும் வாச்சியப் பொருளுக்குறுப்பாயடங்கினமையால் இது குணீபூத (அப்பிரதான) வியங்கியமென்னும் மத்திமகாவியமாயிற்று. மற்றும் இவ்வாறே "கொங்கர்க்கமராவதியளித்தகோவே" என்பதன்கண்ணும் வாச்சியப் பொருளாகிய அமராவதியளித்தலுள் உறுப்பாயடங்கியது - கொங்க ரைப்போர்முனையிற்கொன்றமை; அது இங்கு வியங்கியப்பொருளா மாறு காண்க. ஒன்றொழி பொதுச்சொல் முதலிய குறிப்புமிதன் பாற்படும். பிறவுமன்ன.

இவ் விருவகை வியங்கியப்பொருளும் தோன்றாதகாவியம் அதம காவியமெனவும், சித்திரமெனவும் பெயர்பெறுமென்று முன் குறிப் பிடப்பட்டது. வியங்கியப்பொருள் காவியத்துக்குயிராகச் சொல்லப் பட்டமையால் வியங்கியம் தோன்றாதகாவியம் உயிரில்லாத உடம் புடைய சித்திரம்போல் விளங்குவதுபற்றிச் சித்திரமெனப் பெயர் பெற்றிருக்கிறது.

அச் சித்திரம், சொற்சித்திரமும் பொருட்சித்திரமும் சொற் பொருட்சித்திரமும் என மூன்றுவகையாகப் பகுக்கப்பட்டிருக்கிறது.

அவற்றுட் சொற்சித்திரமாவது சொல்வனப்புத்தோன்றக் கூறு வது. சொல்வனப்பாவது மோனே, எதுகை, முரண், இயைபு, அள பெடை என்னுந்தொடையும் தொடைவிகற்பங்களும் வண்ணவகை களும், மடக்குவகைகளும், யமகமும், திரிபும், ஏகபாதமும், சொற் பின் வருநிலேயும் முதலிய பலவாம்.

அவற்றுள் மோனேயுமெதுகையும் பெரும்பாலும் எல்லாச்செய் யுளுள்ளும் வரப்பெறும். முரண்முதலிய தொடையும், தொடைவிகற் பங்களும், பிறவும் கவி கருதிய ஒரோவழி வருவனவாம். முரண் சொன்முரணும், பொருண்முரணும், சொற்பொருண்முரணுமென மூன்றுவகைப்படும். அவற்றுட் சொன்முரண் ஒன்றும் சொற் சித்திரத்தின் பாற்படும். ஏனைய பொருண்முரணும், சொற்பொருண் முரணும் முறையே பொருட்சித்திரமும், சொற்பொருட்சித்திரமு மாம்.

சொற்சித்திரத்துக்கு உதாரணம்:—

"எய்யாதுநின்றொருவனெய்வதுவுமிளையாடனிளைப்புந்தி
வையாதார்வைத்துநின்மதியார் தாமதித்திடுதல்வழக்கேயன்றோ
மெய்யாதமெய்கடிந்துவீடாதவீடெய்திவீழார்வீழச்
செய்யாள்செய்சரக்கறையாந்திருவாலவாயினுறைசெல்வனாரே."

என்பதாம். இதில் எய்யாது எய்வது, இளையாள் இளைப்பு, வையதார் வைதல், மதியார் மதித்தல், மெய்யாதமெய், வீடாத வீடு, வீழார் வீழ்தல், செய்யாள் செய்தல் என்பன எதிர்மறையும் உடன்பாடுமாகி வழங்கத்தகும் சொற்கள் தொடுக்கப்பட்டுச் சொன்முரணிய வாறும், எதுகை மோனைத்தொடைகள் வந்தவாறுங்கண்டுகொள்க. தொடையும், தொடைவிகற்பங்களும் யாப்பருங்கலக்காரிகையுரை யுதாரணச்செய்யுட்களிலும், வண்ணவகைகள் சிந்து, திருப்புகழ் முதலிய வற்றுள்ளும் காணத்தக்கன.

மடக்குக்கு உதாரணம்:—

"இரவியையிரவின்மதியினைமதியுளிறையினையிறையு மெண்ணரிய, கரவனைக்கரவின் முனிவனைமுனிவர் கருத்தனைக்கருத்தனைத்துடைத் தாள், பரமனைப்பரமபதத்தனைப் பதத்துட் பாரனைப்பாரநத் தூதும், அரவனையரவினரங்கனை யரங்கத்தடிகளை யடிகள்சேவியுமே." என்பதாம். இதனுள் இரவி, மதி, இறை, கரவு முதலிய சொற்கள் மடங்கி வந்தவாறு காண்க.

மற்றும் அடிமுழுது மடக்கும், ஏகபாதமும், யமகமும் இறுதிநிலை மடக்கும் முதலிய பலவும் தண்டியலங்காரம் சொல்லணியியலின் உதாரணச் செய்யுட்களிற் காண்க.

(தொடரும்.)

பத்திராதிபர்.

கவிசித்தாந்தம்.

பிரபந்தங்களிலே ஆங்காங்குக் கவிஞர்களால் அமைத்துப் பாடப் படும் விடயங்களெல்லாம் பட்டாங்காய் நிகழ்ந்த பண்புடையனவல்ல. புனைந்துரை உலகியல் முதலிய பலதிற விடயங்களும் அமைத்துப் பாடப்படும். அவற்றுள்ளே சில "கவிசித்தாந்தம்" எனப்படும். கவிசித்தாந்தமாவது காரணம் முதலியனவின்றிக் கவிஞர்களால் நியமித்துக்கொள்ளப்படுவதொரு முடிபு. இது கவிசமயம் எனவும், கவிமரபு எனவும் சொல்லப்படும். கவிசித்தாந்தமாய் வருவனவற்றுள்ளே சில சில சாகித்திய தர்ப்பணகாரராற் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளைச் செந்தமிழ் கற்பார்க்கு அநுகூலமாக இங்கே மொழிபெயர்த்துக் கூறுவாம்.

க. ஆகாயத்திலும், பாவச்செயலிலும் மலினம் உண்டென்று கூறுதல்.

உ. புகழினையும், நகையினையும் வெண்ணிறமுடையன என்று விளம்புதல்.

ங. சினத்தினையும், இச்சையினையுஞ் செந்நிறமுடையன என்று கூறுதல்.

ச. கடலிலும், நதியிலும் கமலமும், நெய்தலும் உள என்று கூறுதல்.

ரு. அன்னம் முதலிய பறவைகள் நீர் நிலைகளை அடைகின்றன என்று கூறுதல்.

சு. சந்திரிகையைச் சகோரப்பறவைகள் உண்கின்றன என்று கூறுதல்.

எ. கார்காலத்திலே அன்னப்பறவைகள் மானச வாவிக்குப் போகின்றன என்று கூறுதல்.

அ. மகளிர் சுவைத்தலினாலே மகிழமரமும், அவருதைத்தலினாலே அசோக மரமும் மலரும் என்று கூறுதல்.

கூ. விரகவெம்மையினாலே இதயம் பிளக்கின்றது என்று கூறுதல்.

க௰. வண்டுகளின் வரிசையை மன்மதனுக்கு வில்லின் நாண் என்றும், புட்பங்களை அவனுக்குப் பாணம் என்றுங் கூறுதல்.

கக. மன்மதனுடைய புட்பபாணம் இதயம் பிளக்கின்றது என்று கூறுதல்.

கஉ. சூரியனாலே தாமரையுஞ் சந்திரனாலே குமுதமும் மலரும் என்று கூறுதல்.

கங. மயில்கள் முகிலின் முழக்கங்கேட்டு நடிக்கின்றன என்று கூறுதல்.

கச. அசோக மரத்திலும், சந்தனமரத்திலும் பழங்கள் இலை என்று கூறுதல்.

கரு. வசந்தகாலத்திலே சம்பகமரத்திலே மலர் இலை என்று கூறுதல்.

இவைகளும் இவைபோன்ற பிறவும் கவி சித்தாந்தம் என்று சாகித்திய தர்ப்பணகாரர் கூறினர்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

நச்சினார்க்கினியர் *

"உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க் கினியர்" என்று தமிழ்ப் புலவர்கள் கொண்டாடும் இவ்வாசிரியர் நம் தமிழுக்குப் பேருபகாரி. ஸம்ஸ்கிருத காவ்யங்களுக்கு வியாக்கியானங்கள் எழுதிப் பெரும் புகழ்படைத்த ஸ்ரீமல்லிநாதரைப்போல் அரியதமிழ்நூல்களுக்கு உரையெழுதிப் பிரசித்திபெற்ற நல்லாசிரியராதலால் இவரைத் தமிழ் மல்லிநாதஸூரி யென்றே கூறலாம். இம்மகான் நம் மதுரை வாசியாயினும் இவரது சரிதம் நம்மதுரையார் பலர்க்குமே சிதம்பர ரகசியமாக இருப்பது பெருவியப்பே. நம் நாட்டார் இப்புலவர்பெருமானைப்பற்றி அறிதல் இன்றியமையாதது. என் சிற்றறிவினைக்கொண்டு யான் ஆராய்ந்தறிந்த விஷயத்தை நம் நாட்டாருக்குத்தெரிவிப்பதை யென் கடமையாக நினைத்து இவரது அரிய சரிதத்தை ஒருவாறு எழுதலானேன்.

ஆதாரங்கள்:—தற்கால நச்சினார்க்கினியர் என்று கூறத்தக்க மகாமகோபாத்தியாயர் பிரம்மஸ்ரீ வே. சாமிநாதையர் அவர்கள் சீவக சிந்தாமணியிலும் பத்துப்பாட்டிலும் பழைய ஏடுகளிலிருந்து எடுத்தெழுதிய சில செய்யுள்களும், அவைகளில் அவர்கள் எழுதிய முகவுரைகளும், நச்சினார்க்கினியர் செய்த ஐந்து உரைகளில் நான்கு உரைகளும், சில வித்துவான்களது சாஸன ஆராய்ச்சிகளும் ஆகிய இவைகளே இவ்வாசிரியர் சரிதத்தை ஒருவாறு தீர்மானிக்க ஆதாரங்களாகின்றன. இவ்வாதாரங்களைக் கொண்டு யான் ஆய்ந்தறிந்த விஷயங்களைச் சென்றவூல் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்கள் முன்னிலையில் தெரியப்படுத்தியவண்ணம் இச் சமயம் வெளிப்படுத்தலானேன்.

"வண்டிமிர்சோலை மதுராபுரிதனில், எண்டிசை விளங்கவந்த ஆசான்" என்ற உரைச்சிறப்புப்பாயிர ஆசிரியப்பாவின் பகுதியால் இவர் மதுரைவாசி என்பதும், "தண்டமிழ் தெரித்தவண்புகழ் மறை

* The copyright of this article belongs to the author.

யோன்" என்றதால் இவர் அந்தணர் குலத்தவர் என்பதும், "பயின்ற கேள்விப் பாரத்துவாசன்" என்றதால் இவர் பாரத்துவாஜகோத்திரத்தைச் சார்ந்தவர் என்பதும் அறியப்படுகின்றன.

இவர் மதுரைவாசியே யாவார் என்பதற்குச் சில குறிப்புக்கள் இவரது உரையில் காணப்படுகின்றன. அவைவருமாறு:—

பத்துப்பாட்டில் ஒன்றாகிய மதுரைக்காஞ்சி "ஓவுக்கண்டன்ன இருபெருநியமித்து" (1) என்ற அடிக்கு "சித்திரத்தைக்கண்டாற் போன்ற கட்கினிமையுடைய இரண்டாகிய பெரிய அங்காடித் தெருவில்" (2) என்று உரையெழுதி அதன்கீழ் "நாளங்காடி, அல்லங்காடியாகிய இரண்டு கூற்றை உடைத்தென்றார்" என்று குறிப்பும் எழுதினர்.

இதே மதுரைக்காஞ்சி "சிறியரும் பெரியருங்கம்மியர்குழீஇ, நால்வேறு தெருவினுங்காலுற நிற்றர" (3) என்ற அடிகளுக்கு (4)"சிறியோரும் பெரியோரும் ஆகிய நெய்தற்றொழிலைச் செய்வார்திரண்டு நான்காய் வேறுபட்ட தெருவுகடோரும் ஒருவர்காலோடு ஒருவர் கால் நெருங்கநிற்றலைச்செய்ய" என்று உரை எழுதி அதனுடன் "இஃது அந்திக்கடையிற்றெருவிற் புடவை விற்பாரைக் கூறிற்று" என்றும் "கோயிலைச்சூழ்ந்த ஆடவர்தெரு நான்காதலின் நால்வேறு தெருவென்றார்" என்றும் குறிப்புரை எழுதினர்.

மேற்கூறிய குறிப்புரைகளால், மதுரைவாசியாய் ஒருவர் இருந்தாலல்லது இந் நுட்பங்கள் எழுதமுடியாவென்பது தெளிவாகின்றது. இன்றும் கோயிலைச்சுற்றி நான்கு தெருக்களிருப்பதும், அந்திக்கடைப்பொட்டலில் நெய்தற்றொழிலைச் செய்வார் திரண்டுதுணிவிற்பதும் யாவரும் அறிந்தவிஷயம். "நாளங்காடி," (5) "அல்லங்காடி"

(1) பத்துப்பாட்டு 169-ம் பக்கம் 365-ம் அடி.
(2) ஷை 206-பக்கம் 5, 6-வரிகள்.
(3) ஷை 173-பக்கம் 521, 522-ம் அடிகள்.
(4) ஷை 217-பக்கம் வரிகள் 27, 32.
(5) Daily Market.

(6) என்றபெயர்கள் இக்காலத்தில் வழங்கவில்லையாயினும், 'பெரிய கடைவீதி,' 'சின்னக்கடைவீதி' என்று இக்காலம் வழங்குகிறவைக ளே அவைகளைக்குறித்து நிற்கலாமெனத் தோற்றுகிறது.

நச்சினார்க்கினியர் என்ற பெயர் காரணப் பெயரா, இடுகுறிப் பெயரா என்று ஆராய்வோம். தேவாரத்தில் (7) "நச்சுவார்க்கினியர்" என்றதொடர் பரமசிவனைக்குறிப்பிக்கக் காணப்படுகின்றமையால் இது முதலிற் காரணப்பெயராயிருந்து பின்னர்க் காலக்கிரமத்தில் காரண இடுகுறியாயிற்றுப் போலும். இத்தொடரே நச்சினார்க்கினியர் என்று மாறியிருக்கலாம். அப்பெயரே நம்மாசிரியருக்கும் இடப்பட் டிருக்கலாம்.

இவரைக்குறித்த சாஸனம் ஒன்றாவது இருப்பதாக இதுகாறும் வெளியாக வில்லை.

> "பச்சைமாலனையமேகம்பௌவநீர்பருகிக்கான்ற
> வெச்சினுற்றிசையுமுண்ணுமமிழ்தெனவெழுநாவெச்சின்
> மெச்சிநாளுளும்விண்ணோர்மிசைகுவர்வேதபோத
> னச்சினார்க்கினியனெச்சினறுந்தமிழ்நுகர்வர்நல்லோர்."

என்ற உரைச் சிறப்புப்பாயிரச்செய்யுளால் இவருக்குத் தமிழ் உலகத் திலுள்ள புகழ் நன்குவிளங்குகின்றது. இவரது வாக்கின் இனிமையை நோக்கி,

"எவன்ஆலவாயிடைவந்தமுதவாயுடையனெனவியம்பப்பெற்றோன்."

என்று சிறப்பித்துக்கூறினர் ஒரு நல்லிசைப்புலவர்.

> "பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியு
> மாரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ்—சாரத்
> திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
> விருத்திநச்சி னார்க்கினிய மே."

என்ற உரைச்சிறப்புப் பாயிர வெண்பாவால் இம்மகான் இலக்கணங் களிற் சிறந்த தோல்காப்பியத்துக்கும், பத்துப்பாட்டு என்ற அரிய பிர

(6) Evening Market.
(7) திருநாகேச்சரம். திருநாவுக்கரசுநாயனார்-திருநேரிசை. 1-ம் செய்யுள்.

பந்தத் திரட்டினுக்கும், எட்டுத்தொகையுள் ஒன்ருகிய கலித்தொகைக்கும், பேராசிரியரும் உரை யெழுதாதுவிட்ட குறுந்தொகைச் செய்யுள்கள் இருபதுக்கும், பஞ்சகாவ்யங்களில் முதன்மைபெற்ற சீவகசிந்தாமணிக்கும் உரையெழுதி உபகரித்தனர். திருக்கோவையார்க்கும் இவரே உரையெழுதினுர் என்ற பண்டைக்கொள்கை சின்னுட்களுக்கு முன்னரே நம் புலவர் பெருமானுகிய வே. சாமிநாதையர் அவர்களால் மறுக்கப்பட்டு உண்மை வெளியாயிற்று. திருக்குறள் உரையாசிரியர்களில் ஒருவராகிய நச்சரை நச்சினுர்க்கினியர் என்று கூறுவது மயக்காகும். பெயர் விளங்காத பழைய தமிழுரைகளே யெல்லாம் நச்சினுர்க்கினியர் தலேயில் சுமத்துவது பழைய தமிழ்ப்பண்டிதர்களின் இயல்பு. ஆராய்ச்சி மலிந்த இக்காலத்தில் இக்கொள்கை சிறிதும் ஏற்கப்பெருது என்பது திண்ணம்.

மேற்கூறிய 'பாரத்தொல்காப்பியம்' என்ற வெண்பாவை உய்த்துணருங்கால் இவ்வாசிரியர் முதல் முதல் தோல்காப்பியத்துக்கே உரை எழுதியதாகப் புலப்படுகிறது. அது பின் வருங் காரணங்களால் நன்கு விளங்கும்.

சீவகசிந்தாமணி நாமகள் இலம்பகம் 43-ம் செய்யுளாகிய "கண்ணுளார் நுங்காதலர்" என்றதன் உரையில் 'ஈங்கு' தன்மையை யுணர்த்துதல் (8) "செலவினும் வரவினும்" என்னுஞ் சூத்திரத்திற் கூறினும் எனவும், அதே பிரபந்தம் குணமாலேயார் இலம்பகம் 42, 43-ம் செய்யுள்களின் உரையில் "ஆசிரியர் (9) நண்டுந்தும்பியும் என்று தும்பியைப்பின்வைத்தது மேல்வருஞ் சூத்திரத்தின் " மாவுமாக்களுமையறிவென்ப" என்ற ஐயறிவு இதற்கு மேலு தற்கென்றுணர்க; இதனே வாராததினுல் வந்தது முடித்தல் என்னுந் தந்திரவுத்தியாற் கொள்கவென்று ஆண்டு உரைகூறிப் போந்தாம்" எனவும், விமலேயாரிலம்பகம் 25-ம் செய்யுளின் உரையில் "சீவகசாமி யென்னும் இருபெயரொட்டுப்பண்புத்தொகை 10 'பண்புகொள் பெயருமதனே

(8) தொல்: சொல். கிள. 28.
(9) தொல்: பொரு - மர - 31.
(10) தொல் - சொல் - விளி - 23.

ரற்றே' என்ற சூத்திரத்தில் தன்னின முடித்தலென்பதனற் சீவக சாமியாரென ஆரீறுய்ச் சீவகசாமியீரேயென ஈரோடு எகாரம்பெற்ற தெனக் கூறினும்" எனவும், முத்தியிலம்பகம் 92-ம் செய்யுளுரையில் "கொப்புளித்துப்பருகி யென்பனவும், வயாமரமென்பதூஉம், மாற்றருஞ் சிறப்பின் மரபன்றி, வழக்கின்கண் அடிப்பட்டுச் செய்யுளின்பம் படவந்த மரபென்று மரபியலிற்பாதுகாத்தாம்" எனவும் கூறியவற்ருல் தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய பின்னரே சிந்தாமணிக்கு உரை எழுதினர் என்பது நன்கு விளங்குகின்றது.

இதுபோலவே பத்துப்பாட்டுரையும் தொல்காப்பிய உரைக்குப் பிற்பட்டே எழுதப்பட்டதென்பதற்கு [11] சிறுபாணற்றுப்படையுரையில் [12] "நடுவுநிலைத்திணையே என்னுஞ் சூத்திர உரையாற் பாலைத் தன்மை கூறினும். அது கொண்டு உணர்க" என்று கூறியிருப்பதும், அதே (13) சிறுபாணற்றுப் படையுரையில் "கற்பின் மிகுதி தோன்ற முல்லை சூடுதல் இயல்பு. கதுப்பிற் கதுப்பென்பது முதல் இத்துணையும் இயைபுத்தொடை திரிந்து வந்ததென்றறிக. (14) "இறுவாயொன்றல்" என்னுஞ் சூத்திரத்துட் கூறினும்." என்று கூறியிருப்பதும் (15) பெரும்பாணற்றுப்படையுரையில் "வண்டுந்தும்பியும்" என்னுஞ் சூத்திரத்திற் "செவிப்பொறியான் இவையுணர்தல் கூறினும்" என்று கூறியிருப்பதும் தக்க சான்ருகும்.

இவ்வாறே கலித்தொகை 38-ம் கலியின் உரையில் (16) "இஃது "உள்ளுறையுவமமேனையுவமமெனத், தள்ளாதாகுந்திணையுணர்வகையே" (17) என்னும் அகத்திணையியற் சூத்திரத்தானும் "உடனுறை உவமஞ்சுட்டுநகை சிறப்பெனக், கெடலரு மரபினுள்ளுறையைந்தே" (18) என்னும் பொருளியற் சூத்திரத்தானும் யாங்கூறிய உரையான் உணர்ந்துகொள்க." என்று கூறியிருப்பதாலும்,

127-ம் கலியின் உரையில் (19) இஃது "ஆகவாகலென்பதென்னு - மாவயின் மூன்றும் பிரிவிலசைநிலை" (20)என்னுஞ் சூத்தி

---

(11) 75-ம் பக்கம். (12) தொல்: பொரு: அகத்-9. (13) 76-ம் பக்கம். (14) தொல்: பொரு, செய் - 96. (15) 122-ம் பக்கம். (16) 111-ம் பக்கம். (17) தொல்: பொரு: அகத்: 46-ம் சூத்திரம். (18) தொல்: பொருளியல்: 242-ம் சூத்திரம். (19) 402-ம் பக்கம். (20) தொல்: சொல்: இடை: 32-ம் சூத்திரம்.

ரத்து என்ப என்பதற்கு உதாரணமாகக் காட்டினும். அதனுலுணர்க" என்று கூறியிருப்பதாலும் கலித்தொகை உரையும் தொல்காப்பிய உரைக்குப் பிற்பட்டதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது.

குறுந்தொகை உ௦ பாடல்களுக்கும் இவர் எழுதிய உரை இன்னும் கிடையாமலிருப்பது தமிழ் நாட்டாரின் துர்ப்பாக்கியமென்றே கூறல்வேண்டும்.

மேற்கூறிய பலகாரணங்களால் தொல்காப்பிய உரையே இவரது முதலுரை எனத்தெளிவாகின்றது.

ஆனல் ஏனைய நான்குரைகளில் எதன்பின் எது எழுதப்பட்டது என்று தீர்மானிப்பதற்கு யாதொரு சாதனமுங் கிடைத்திலது. ஆயினும் மேற்கூறப்பட்ட உரைச்சிறப்புப் பாயிரவெண்பாவிற் கூறிய முறையால் தொல்காப்பிய உரைக்குப்பின் பத்துப்பாட்டின் உரையும், அதன்பின் கலித்தொகை உரையும், அதன்பின் குறுந்தொகை உரையும், அதன்பின் சிந்தாமணி உரையும் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று ஊகிக்க இடமுண்டாகின்றது. ஆனல் ஆசிரியப்பாவிற் கூறப்பட்ட முறையால் சிந்தாமணிக்குப்பின் குறுந்தொகை கூறப்பட்டிருக்கிறது. என்னினும் மிக்க அறிவுடைய பண்டிதர்கள் இதன் உண்மையை ஆராய்ச்சி செய்து வெளியிடுவார்கள் என்று நம்புகிறேன்.

மேற்கூறிய உரைகளின்சிறப்பைச் சிறிது ஆராய்வோம். உரைச்சிறப்புப்பாயிர ஆசிரியப்பாவே இதனை ஒருவாறு நன்கு புலப்படுத்துகின்றது. அப்பாவின் கண்ணுள்ள 57 அடிகளில் தொல்காப்பிய உரைக்கு 14 அடிகளும், பத்துப்பாட்டு உரைக்கு 4 அடிகளும், கலித்தொகை உரைக்கு 14 அடிகளும், சிந்தாமணி உரைக்கு 8 அடிகளும், குறுந்தொகை உரைக்கு 5 அடிகளும், கூறப்பட்டிருக்கின்றன.

" தொல்காப்பியமெனுந்தொடகடற்பரப்பை
மறுவுங்குறைவுமின்றியென்றுங்
கலையினிறைந்தகதிர்மதியென்ன
நிலையுடைகலத்தினெடுங்கரைகாணக்

கல்லாமாந்தர்கற்பது வேண்டியும்
நல்லறிவுடையோர்நயப்பதுவேண்டியும்
உரையிடையிட்டகாண்டிகையுரைத்தும்."

என்றதனால் பாரத்தொல்காப்பியத்துக்கு அரியபெரிய மேற்கோள்களும் சாஸ்திரக் கொள்கைகளும் ஆசாரங்களும் உலக வழக்கங்களும் எடுத்துக்காட்டிக் கல்லாமாந்தரும் கற்பதுவேண்டியுரை எழுதியிருப்பது வியக்கத்தக்கது.

தொல்காப்பியத்துக்கு உரையெழுதிய ஆசிரியர்களில் உரையாசிரியரெனப் பெயர்பெற்ற இளம்பூரணர் எழுத்துக்கும் சொல்லுக்குமே உரை யெழுதினர்.

தொல்காப்பியம் முழுவதுக்குமே இவர் உரை எழுதியிருப்பதாகச் சிலர்கூறினும் எழுத்துக்கும் சொல்லுக்கும் எழுதின உரைகளே இக்காலம் வழங்குகின்றன. சொல்லதிகாரவுரை இன்னும் அச்சானதாகத் தெரியவில்லை.

சொல்லதிகாரத்துக்கு மட்டும் ஆசிரியர் சேனாவரையர் உரையெழுதிப் போந்தனர். கல்லாடர் எழுதியதாகச் சொல்லப்பட்ட உரை இக்காலத்தில் வழங்கவில்லை. பேராசிரியரது உரை செய்யுளியலுக்கு மாத்திரமே இருப்பதாக வெளியாகின்றது. நம் நச்சினார்க்கினியரோவெனின் தொல்காப்பியம் எல்லாப்பகுதிக்கும் உரையெழுதி உபகரித்தவர். பொருளதிகாரத்துக்குஇவ்வாசிரியர் உரையிடையிட்ட காண்டிகையுரை யெழுதி யுபகரித்திராவிடின் அதன் கரைகாணுதல் அரிதினும் அரிதாகும். பலசங்கநூல்களின் அரிய பெரிய மேற்கோள்களும், பல அரிய ஸ்மிருதி ஆசாரங்களும், அரிய உலகவழக்கங்களும் நாட்டுவழக்கங்களும், ஜாதிவழக்கங்களும், இப்பொருளதிகார உரையிற் பொன்போற் பொதிந்துகிடக்கின்றன. இலக்கியமும் இலக்கணமும் செறிந்த ஓர் அற்புத நூல் என்றே இதனைச் சாற்றலாம். அவரது புத்தி விசாலம் இதன் ஒவ்வொரு வரியிலும் பரக்கக்காணலாம். அவரது வாதத்திறமையும் அவரது அழகியநடையும் எவர் மனத்தையும் அவர் வசமாக்கிவிடும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தமிழ்க்கடலின் எல்லைகண்டவர் என்பதை இவ்வுரையிலேயே எங்குங் காணலாம்.

"ஆன்றோர்புகழ்ந்த அறிவினிற்றெரிந்து
சான்றோருரைத்ததண்டமிழ்த்தெரியல்
ஒருபதுபாட்டுமுணர்பவர்க்கெல்லா
முரையறமுழுதும்புரைபடவுரைத்தும்."

என்று கூறியவாற்றால் பத்துப்பாட்டின் உரையின் சிறப்பு நன்குவிளங்கும். பத்துப்பாட்டினுக்கு இவரது உரைமட்டும் ஏற்படாதிருப்பின் பாட்டின் அடி நுனியையும் அறிதல் புலவர்களுக்கும் அரிதாகவேமுடியும். பத்துப்பாட்டைத் தேடித்திரிந்து கண்டுபிடித்துப் பரிசோதித்து வெளிப்படுத்திய மகா மகோபாத்தியாயர் வே. சாமிநாதையர் அவர்கள் அப்பிரபந்தத்தின் முகவுரையில்:—

"ஆறுமுகமங்கலத்துப் பிரதியில்மட்டும் திருமுருகாற்றுப்படை மூலமும், பொருநராற்றுப்படை மூலமுமிருந்தன; மற்றைச் சிறுபாணாற்றுப்படை முதலிய எட்டிற்கும் மேற்கூறிய பிரதிகளில் ஒன்றிலேனும் மூலம் தனித்துக்கிடையாமையின், உரைக்குமுன்னம் சிறிது சிறிது ஒரு மொழியுந் தொடர்மொழியுமாக எழுதப்பட்டுள்ள மூல பதங்களையே யிணைத்து எனது சிற்றறிவிற்கு எட்டியமட்டும் அடிவரையறை செய்து சிறுபாணாற்றுப்படை முதலிய பாட்டுக்கள் எட்டினையும் தனித்தனியே எழுதிக்கொண்டேன். உரையாசிரியர்களால் இவற்றிலிருந்து பழைய இலக்கிய இலக்கணவுரைகளில் எழுதப்பட்டவற்றுள் கிடைத்த சில, இவற்றின் மூலங்களை இணைக்குங் காலத்து எனக்குப் பேருதவியாயிருந்தன.

பின்பு சென்னைச் சர்வகலாசாலையைச் சார்ந்த கையெழுத்துப் புத்தகசாலையில் இந்தப் பத்துப்பாட்டுப் பிரதியிருப்பதுதெரிந்து அதனோடு பிரதியை ஒத்திட்டு வருகையில் அப்புத்தகத்தில் பெரும்பாணாற்றுப்படை மூலமும் முல்லைப்பாட்டு மூலமும் இருப்பக்கண்டு அவற்றோடு நான் எழுதிவைத்துக்கொண்டிருந்த மேற்படிப் பாட்டுக்களின் மூலங்களை ஒப்பு நோக்கிக்கொண்டேன்" என்றுகூறியிருக்கின்றார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டு அவர்கள் எட்டுப்பாட்டுக்களின் மூலங்களை ஒழுங்குபடுத்துவதற்கு நச்சினார்க்கினியரது உரையே சாதனமாயிருந்தது. ஒவ்வொரு பாட்டுக்கும் நச்சினார்க்கினியர் எழுதிய

அற்புதமான வினைமுடிபுகளில்லாவிடின் மூலபாடத்தைச் சுத்தப் படுத்துவது சுலபமான காரியம் ஆகமாட்டாது.

"ஒலித்திரைத் தலத்தினுணர்ந்தோ ருரைக்குங்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்
குள்ளுறை யுவமமு மேனையுவமுஞ்
தெள்ளிதிற் றெரிந்து திணைப் பொருட்கேற்ப
வுள்ளுறை யுவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
யிறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்
பாற்படநூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற வின்னுரை பொருள்பெற விளம்பியும்."

என்று கூறியவாற்றான் கலித்தொகையினது இன்னுரையின் இனிமை புலப்படும். உள்ளுறை உவமத்து ஒளித்த பொருளைக் கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந்து உணர்த்தியது இவ்வாசிரியரது அரிய நுட்ப புத்தியை விளக்குகின்றது. இவ்வாறு உணர்த்திய தற்கு இரண்டொரு உதாரணம் எடுத்துக் காட்டுவோம்.

"வீங்குநீர் பரத்தையர்சேரியாகவும், அதன்கண் வீழ்ந்த நீலங் காமச்செவ்வி நிகழ்ந்த பரத்தையராகவும், பகர்பவர் பரத்தையரைத் தேரேற்றிக்கொண்டுவரும் பாணர் முதலிய வாயில்களாகவும், அம் மலரைச்சூழ்ந்த வண்டு தலைவனாகவும், யானையின் கடாத்தை ஆண்டுறைந்தவண்டுகள் வந்தவண்டிற்கு விருந்தாற்றுதல் பகற்பொழுது புணர்கின்ற சேரிப்பரத்தையர் தமது நலத்தை அத்தலைவனை நுகர்வித்தலாகவும், கங்குலில் வண்டு முல்லையை ஊதுதல் இற்பரத்தையருடன் இரவு துயிலுதலாகவும், பண்டுமருவிய பொய்கையை மறத்தல் தலைவியை மறத்தலாகவும் பொருள் தந்து ஆண்டுப்புலப் படக்கூறிய கருப்பொருள்கள் புலப்படக்கூறாத மருதத்திணைப் பொருட்கு உள்ளுறை யுவமமாயவாறு காண்க."

" திருத்தகுமுனிவன்கருத்திதுவென்னப்
பருப்பொருள்கடிந்துபொருட்டொடர்ப்படுத்து
வினையொடுமுடியப்புனையுரையுரைத்து."

என்றதனல் சிந்தாமணி உரையின் அழகு விளக்கப்பட்டது. ஆசிரியர் நச்சினர்க்கினியரே தாம் சிந்தாமணியின் முதற் செய்யுளின் உரை முடிவில் "மேல்வரும் செய்யுட்கும் இவ்வாறுரைப்பின் உரை பெருகுமாதலின் இனி நல்லறிவுடையோர் உய்த்துணருமாறு சுருங்க உரைக்கின்றும்" என்று கூறிய வாற்றல் சிந்தாமணிக்குச் சுருக்கமான உரை யெழுதினுலும் கவிஹ்ருதயத்தை நன்கு விளக்கியிருக்கின்றர் என்பது அவ்வுரையிற் பயின்றவர் அனைவருக்கும் நன்கு விளங்கும். சிற்சில செய்யுள்களுக்குச் சுருக்கமாய்க் கருத்துமட்டும் எழுதுவர். சிற்சில செய்யுள்களுக்கு விரிவாகக் குறிப்புரை யெழுதி விளக்குவர். சிற்சில செய்யுள்களின் பொருளைப்பதசாரங் கூறித் தெளிவாக எடுத்துக்காட்டுவர். உதாரணமாக,

" கரும்பேதேனேயமிர்தேகாமர்மணியாழே
யரும்பார்மலர்மேலணங்கேமழலையன்னம்மே
சுரும்பார்சோலைமயிலேகுயிலேசுடர்வீசும்
பெரும்பூண்மன்னன்பாவாய்பூவாய்பிணைமானே."

(இலக்கணையாரிலம்பகம் செய் : 76.)

"கணவற்கு மெய் முழுதும் இனிதாயிருத்தலிற் கரும்பு ; நல்லாருறுப் பெல்லாங்கொண்டு இயற்றலிற்றேன் ; இவ்வுலகிலில்லாத மிக்க சுவையும் உறுதியும் கொடுத்தலின் அமிர்து ; காமவேட்கையை விளைவித்து இனிய பண்தோற்றலின் மழலையையுடையதோர் யாழ் ; கணவற்குச் செல்வத்தைக் கொடுத்தலிற் றிரு ; நடையால் அன்னம்; சாயலான் மயில் ; காலமின்றியும் கேட்டோர்க்கு இன்பஞ்செய்தலின் குயில் ; மன்னன் மகளே யென்றல் புகழன்மையின் மன்னன்பாவா யென்றது அவன் கண்மணிப்பாவையென்ப துணர்த்திற்று. இனி யிவள் கொல்லிப்பாவையன்று ; மன்னன் பாவை யென்றுமாம். சேடியர் கற்பித்த கட்டளை தப்பாமற் கூறலிற் பூவை. நோக்கத்தால்மான்." என்று இவர் கூறிய பதசாரம் எவர் மனத்தையும் ரஞ்சிப்பியாமலிராது.

"கல்வியும்காட்சியுங்காசினியறியப்
பொருடெறிகுறுந்தொகையிருபதுபாட்டிற்
கிதுபொருளென்றவனெழுதாதொழிய
விதுபொருளென்றதற்கேற்பவுரைத்தும்."

என்று கூறியவாற்றான் குறுந்தோகையின் உரை மாண்பு வெளியாகின்றது. இனி இவரது காலத்தை ஒருவாறு தீர்மானிப்போம்.

(தொடரும்.)

எஸ். சாமிநாதையர்.

உ

நாலடியா ராராய்ச்சி.

(உ௱௬-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

(13) "𑌯𑌥𑌾 𑌧𑍇𑌨𑍁𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌷𑍁 𑌵𑌤𑍍𑌸𑍋 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌤𑌰𑌮𑍍 ।
𑌤𑌥𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍃𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌨𑍁𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥"

இதன்பொருள்:—ஆயிரக்கணக்காகவுள்ள பல பசுக்களிற் செலுத்திவிடப்பட்டாலும் இளங்கன்று எவ்வாறு தன்றாயைத் தேடியடைவதில் வல்லதாகின்றதோ அவ்வாறே முன்செய்த வினையும் தன்னைச்செய்த உரியவனைத்தேடியடைந்து அவனைப் பின்றொடர்ந்து செல்லாநின்றது. (இச்சுலோகம் கி. பி. 1199 ல் பூர்ணபத்திரர் என்னும் ஜைநமுனிவர் தாமொருவாறு சரிப்படுத்தியமைத்த பஞ்சதந்த்ரத்தில் மேற்கோளாகவுளது. டாக்டர் ஹெர்ட்டல் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ள (Harward Oriental Series, Vol. II.) ஷை புத்தகம் 156-வது பக்கம் பார்க்க.)

"பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு."

நாலடியார் 101.

(14) "ஏக ஏவ ஸுஹ்ருத்தர்மோ நிதநேऽப்யநுயாதி ய: ।
ஶரீரேண ஸமம் நாஶம் ஸர்வமந்யத்து கச்சதி ॥"

(பஞ்சதந்திரம். No. IV. p. 46. by Dr: Hertel.)

இதன்பொருள்:— மாணம் வருங்காற்றுணையாக நின்று கூட வருவது தருமமொன்றேயாகும். மற்றதும் எதுவும் சரீரத்துடன் இவ்விடத்தே நின்றழியும்

"தாஞ்செய் வினையல்லாற் றம்மோடு செல்வதுமற்
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை—யாங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயனின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது."

நாலடியார் 120.

(15) "அயம் நிஜ: பரோ வேதி கணநா லகுசேதஸாம் ।
உதாரசரிதாநாம் து வஸுதைவ குடும்பகம் ॥"

இதன்பொருள்:—இவர் உறவினர், இவர் அயலார் என்னும் நினைப்பு இழிவானவெண்ணமுடைய அற்பர்களுக்கேயாம். மேலான வெண்ணமுடைய பெரியோர்களுக்கு உலகமெல்லாம் தங்குடும்பமே யாகும்.

"இன்ன ரினைய ரெமர்பிற ரென்னுஞ்சொ
லென்னு மிலரா மியல்பினுற்—றுன்னித்
தொலைமக்க டுன்பந்தீர்ப் பாரேயார் மாட்டுந்
தலைமக்க ளாகற்பா லார்"

நாலடியார் 205.

(16) "மூக: பராபவாதே
பரதாரநிரீக்ஷணேऽப்யந்த: ।
பங்கு: பரதநஹரணே
ஸ ஜயதி லோகத்ரயே புருஷ: ॥"

இதன்பொருள்:—பிறர் பழியைப் புறத்திற் சொல்வதில் மூகை யாய் அயலாருடைய மனைவியை நோக்குவதிற் குருடனாய்ப் பிறர் பொருளைக்கொள்வதில் முடவனாய் நிற்பானாகில் அவன் மூவுலகத் திலும் சிறந்தவனாகக் கொள்ளப்படுவான்.

341

"பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த்—தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வவற்கு."

நாலடியார் 158.

(17) "𑌅𑌦𑌤𑍍𑌤𑌾𑌨𑍁𑌪𑌭𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌧𑌨𑍇𑌨 𑌧𑌨𑌿𑌨𑍋 𑌯𑌦𑌿 ।
𑌭𑌵𑌾𑌮𑌃 𑌕𑌿𑌂 𑌨 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌧𑌨𑍇𑌨 𑌧𑌨𑌿𑌨𑍋 𑌵𑌯𑌮𑍍 ॥"

இதன்பொருள்:—ஈயாது முண்ணாது மீட்டிவைத்த பொருளினாற் பொருளுடையராவாரெனில் அப் பொருளினால் யாமும் பொருளுடையோமென்பதில் ஐயமென்னை?

"எனதென தென்றிருக்கு மேழை பொருளை
யெனதென தென்றிருப்பன் யானுந்—தனதாயிற்
றானு மதனை வழங்கான் பயன் றுவ்வான்
யானு மதனை யது."

நாலடியார் 276.

(18) "𑌅𑌨𑌨𑍍𑌤𑌪𑌾𑌰𑌂 𑌕𑌿𑌲 𑌶𑌬𑍍𑌦𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂
𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌶𑍍𑌚 𑌕𑌾𑌲𑍋 𑌬𑌹𑌵𑌶𑍍𑌚 𑌵𑌿𑌘𑍍𑌨𑌾𑌃 ।
𑌯𑌤𑍍𑌸𑌾𑌰𑌭𑍂𑌤𑌂 𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑌨𑍀𑌯𑌂
𑌹𑌂𑌸𑍋 𑌯𑌥𑌾 𑌕𑍍𑌷𑍀𑌰𑌮𑌿𑌵𑌾𑌮𑍍𑌬𑍁𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍 ॥"

(பஞ்சதந்திரம் Bombay Sanskrit Series VII. p. 2.)

இதன்பொருள்:—சத்தரூபமாயுள்ள கல்விகளோ முடிவில்லன. கற்பவரது வாழ்நாட்கள் சில. இடையூறுகள் பலவாயுள்ளன. ஆதலின் அன்னப்பறவை நீர் நீங்கப் பாலையுண்ணுவதுபோலக் கற்பவர்கள் தகுதியுள்ள நூல்களைக் கற்றறிதல் வேண்டும்.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி
னாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து."

நாலடியார் 135.

(19) "ஸங்கம்ய வ்ருக்ஷே ஸமாநே ஏகா நாநாதேஶ்ய விஹங்கமா: ।
ப்ராதஶ்ச விநியாந்தி கா தத்ர பரிதேவநா ॥"

இதன்பொருள்:—பற்பலவிடங்களினின்றும் பறவைகள் வந்து ஒரே மரத்திற்கூடியிருந்து புலர்காலையில் அதைவிட்டுப் பிரிந்து பறந்தோடுகின்றன. அதன்கண் துயருறுவதெதற்கு.

"கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து."

நாலடியார் 30.

மேலே காட்டிய சுலோகங்களும் செய்யுட்களும் ஒன்றையொன்று முற்றிலுமொத்திருக்கின்றன. தற்செயலாக விருவர் மனத்திலும் ஒரேவிதமான கற்பனை உதயமாதலும் கூடாதோவெனின் அதுவும் ஸம்பாவிதமேயாகும். பலவிடங்களில் அடிமுதல் நுனிவரையில் திருஷ்டாந்தங்களுள்பட முற்றுமொன்றாகவே இருவர் மனத்திலுமுதயமாயிற்றென்பது அஸங்கதமாம். நாலடியாரிலுள்ள செய்யுட்களையே மொழிபெயர்த்து வடமொழியிற் சேர்த்துக்கொண்டிருத்தலுமாகாதோவென வாராய்தலும் தகுதியேயாகும். மேலே காட்டிய சுலோகங்களில் முதலாகவுள்ளவிரண்டு சுலோகங்கள் பர்த்துருஹரி சதகங்களினின்றுமெடுத்தவை. பர்த்துருஹரி வடதேசத்தவர். அவர் தமிழ்நாட்டின்கண் மட்டுமுலாவி வந்த நாலடியாரிவிருந்தெடுத்து மொழிபெயர்த்துக் கொண்டனரென்றெண்ணவொண்ணுது. வடமொழியோ தமிழ்நாட்டிலும் பண்டைக்காலந்தொட்டுப் பரவியிருந்ததென்பது துணிபு. மேலும் நாலடியாரில் வந்துள்ள அபராணம், அமரர், அவத்தம், கும்பம், கோத்திரம், சகடம், சத்தம் (இலக்கணம்), சலம் (வஞ்சனை), சேடியவர், சேதனம், தாரம், தீர்த்தம், நிரயம் (நரகம்), நீசர், பாசம், பாணி, பிலம், புத்தகம், போகம், மூகை (ஊமை), விரதம், வேதிகை, வேசையர் முதலிய வடசொற்களும் வடமொழி தமிழகத்திற் பரவியிருந்ததென்பதற்குச் சான்று பகரும். பர்த்துருஹரி கி. பி. 651 ஆமாண்டில் மண்ணுலகம் விட்டு விண்ணுலகமேகினரென்பது தீரத்தெளிந்த

விஷயம். ஆதலின் கி. பி. 651 ஆமாண்டிற்குப் பிற்பட்டே நாலடியார் அமைக்கப்பட்டிருத்தல்வேண்டுமெனத் தெளியலாகும். ஏற்கனவே முத்தரையர் கி. பி. 7-வது 8-வது நூற்றூண்டுகளிலிருந்திருக்கவேண்டுமெனவும், அவர் காலத்துச் செய்யப்பட்ட நூலாகக் காணப்பட்டமையின் நாலடியார் அக்காலத்தினதாகவிருத்தல்வேண்டுமெனவும் காட்டப்பட்டுளது. ஆகலின் நாலடியாரின் காலம் கி. பி. 650 - ஆமாண்டுக்குப் பிற்பட்டு கி. பி. 900 - வது வருஷத்திற்கு முற்பட்டதெனக் கொள்ளல் இயலும்.

பிரஸங்கரத்நாவளி, திருஷ்டாந்தசதகம் இவைகளியற்றப்பெற்ற காலம் கண்டறியப்படவில்லை. (12), (19) இவ்விலக்கங்களிட்ட சுலோகங்கள் ஸ்புடசுலோகங்கள். அதாவது பழஞ்செய்யுட்கள்எனப் பலரும் சொல்லக்கேட்டவையே யாகும். மற்றசுலோகங்கள் பஞ்சதந்த்ரம், சார்ங்கதரபத்ததி, ஸுபாஷிதரத்ந பாண்டாகாரம், ஸுபாஷிதரத்நாகரம் என்னும் நூல்களிற் காணப்படுகின்றன. அந்நூல்களிலுள்ள சுலோகங்கள் யாவும் வேறு பலநூல்களினின்றுமெடுத்து அந்நூல்களிற் றெருகுக்கப்பட்டனவாகும்.

பஞ்சதந்த்ரம் ஆறுவது நூற்றூண்டில் கி. பி. 531—572 இவ்வாண்டுகளுக் கிடைப்பட்ட காலத்து நூஷீர்வான் என்றவரசன் காலத்தில் பாலவி பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருத்தலின் அக்காலத்திலேயே பஞ்சதந்த்ரம் ஏற்பட்டிருந்ததென்பது துணியப்படும். ஆயினும், இப்பொழுது கிடைக்கப்பெறும் சிறிதும் பெரிதுமாக வுள்ள பல பஞ்சதந்த்ரங்களுள் முதனூலின்னதென்பதறிவதற்கரிதாயிருக்கின்றது. ஜெர்மானிய தேசத்துள்ள டாக்டர் ஹெர்ட்டல் என்பவர் மட்டும் நான்கு வகைப்பட்ட பஞ்சதந்த்ரங்கள் வெளியிட்டிருக்கின்றனர்.

சார்ங்கதரபத்ததி கி. பி. 1063-ல் இயற்றப்பெற்றுக் காசிமாநகரில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது. ஸுபாஷிதரத்நபாண்டாகாரம், ஸுபாஷிதரத்நாகரம் இவ்விரண்டு நூல்களும்சென்ற நூற்றூண்டினிறுதியிற் பம்பாயில் அச்சிட்டு வெளியிடப்பட்டன. ஆகவே மேலே குறித்த சுலோகங்கள் இன்ன முதனூல்களினின்றுமெடுக்கப்

பட்டன வென்பதும், இன்னகாலத்தன வென்பதும் விளங்கவில்லை. ஆயினும், இச்சுலோகங்கள் நாலடியாரிலுள்ளசெய்யுட்களிற் சில சில வடநூற் பொருள்களை யுள்ளிட்டிருக்கின்றன வென்பதனை விளக்கிக் காட்டப் பயன்படுவனவாகுமென்பதற்கையமில்லை. இனியும் பேரறிவாளர்கள் செய்யப்புகும் பேராராய்ச்சிகளில் அவர்கள் இத்தகைய சுலோகங்கள் இன்ன முதனூல்களினின்று மெடுக்கப்பட்டவை யெனவும், இன்னகாலத்தன வெனவும் ஆய்ந்தறிந்து அளவிட்டுரைப்பார்களென்னும் நம்பிக்கைகொண்டே இத்தகைய சுலோகங்களை யீண்டெடுத்துக் கூறினமல்லாது வேறில்லை. இத்தகைய பல் வேறு சுலோகங்களையு மவர் எடுத்துக்காட்டலுங் கூடுமன்றே.

இன்னுமிரண்டொரு விஷயங்கள் முற்பக்கங்களிற் குறிக்கப் படாது போயினமையின் அவைகளையு மெடுத்துக் காட்டல் தகுதி யெனக்கருதியீண்டெடுத்துக் கூறப்படுகின்றன.

(1) சிலர் நச்சினார்க்கினியர் கி. பி. எட்டாவது ஒன்பதாவது நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட காலத்திருந்தவரெனவும், அவருக்கும் முற்பட்ட காலத்திருந்தவரான பேராசிரியர் தமது திருக்கோவையாருரையில் நாலடியாரினின்று மேற்கோள்களெடுத்துக் காட்டியிருத்தலின் நாலடியார் எட்டாவது நூற்றாண்டிற்கு நெடுங்காலம் முற்பட்டதாகுமெனவு மெண்ணுவாராயினர். நச்சினார்க்கினியர் பெருந்தேவனார் பாரதத்தினின்றும் ஜீவகசிந்தாமணியுரையில் மேற்கோள்களெடுத்துக் காட்டியிருக்கின்றன ரென்பது பலருமறியாததன்றே. பாரதம் பாடிய பெருந்தேவனாரின் காலம் கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டென 1899-வது வருஷத்திய எபிகிராபிகல் ரிபோர்ட்டு பிரகரணம் 16-லும், 1906-வது வருஷத்திய ஷை ரிபோர்ட்டு பிரகரணம் 23-லும் விளங்கக்காட்டப்பட்டுளது: மேலும் நச்சினார்க்கினியர் கி. பி. 14-ஆவது நூற்றாண்டுக்கு முற்பட்டவராகாரென 1905-வது வருஷத்திய தஞ்சைத் தமிழகம், இலக்கம் 4, பக்கம் 91—95-ற் காட்டப்பட்டுளது. ஆதலின் நச்சினார்க்கினியருக்குச் சிலர் நினைக்குமாறு எட்டாவது ஒன்பதாவது நூற்றாண்டென்னும் அத்தகைய பழைமையான காலம் சாலாதென விளங்கும். ஆகவே நாலடியார்

எட்டாவது நூற்றுண்டுக்கு நெடுங்காலம் முந்தியதாகுமென்னும் கூற்று எவ்வாற்றானும் வலியுருது.

(2) மற்றும் சிலர் புத்தமித்திரன் இயற்றிய வீரசோழிய மென்னுமிலக்கண நூலும் அவரது மாணுக்கரான பெருந்தேவனர் வகுத்த வந்நூலுரையும் இற்றைக்கேறக்குறைய ஆயிரத்தைஞ்ஞூறுண்டுகளுக்கு முந்தியவையாகுமெனவும், அவ்வுரையின்கண் உபகாரகப்படலத்தும் யாப்புப்படலத்தும் அலங்காரப்படலத்தும் நாலடியாரினின்று மேற்கோள்களெடுத்து உதாகரிக்கப்பட்டிருக்கின்றனவாதலின் நாலடியார் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முற்பட்ட நூலாகுமெனவும் புகல்வர். வீரராஜேந்திரன் எனப்பெயர் வழங்கிய வீரசோழன் என்னுமரசன் காலத்தில் அவ்வரசனது பெயரால் வீரசோழியம் இயற்றப்பெற்றதென்பது அந்நூலினின்றுமே நன்குணரலாகும். அவ்வரசன் கி. பி. 1064-முதல் 1070-வரையில் ஏழாண்டாண்டன னென்பதும் சரித்திரவாராய்ச்சிகளாற்றேர்ந்தறிந்த விஷயமாகும்.

ஆகவே வீரசோழியத்தின் காலம் கி. பி. 11-வது நூற்றுண்டின் பிற்பகுதியேயாகுமென்பது தெற்றெனவிளங்கும். உரைவகுத்தவரையும் நூலாசிரியரையும் ஒரேகாலத்தவர்களாக வைப்பினும் நாலடியார் 11-வது நூற்றுண்டிற்கு முற்பட்டதெனல்மட்டுமே நிலைக்கும். வீரசோழியவுரை ஆயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முற்பட்டதாகாதென்பதற்கு வேறொருநியாயமும் கூறலாகும். வீரசோழியவுரையின்கண் அலங்காரப்படலத்துள் 147-வது பக்கத்திலும் 175-வது பக்கத்திலுமாக விரண்டிடங்களிற் பெருந்தேவனர் பாரதத்தினின்றும் "மலைகரந்து போகாதோ வற்றுதோ பௌவ - மலர்கதிரோன் வீழானே வஞ்சி- நிலையெனக்குப்- பார்வேந்த ரொப்பரோ பாய்நீர்க் குருகுலத்தார்-போர்வேந்தே யான்முனிந்த போது." என்னுஞ் செய்யுள் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கின்றது. பெருந்தேவனர் பாரதம் 9-ஆவது நூற்றுண்டுக்குப் பின்னரே செய்யப்பட்டதென்பதனைக்குறித்தனம். ஆகவெ வீரசோழியவுரை ஒன்பதாவது நூற்றுண்டுக்குப் பிற்பட்ட காலத்தினதென்பது ஒருதலைத் துணிபு. ஆகவே வீரசோழியம் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முற்பட்டதாகு மென்

னும் கூற்றும் எவ்வாற்றானும் கொள்ளலியலாதென்பது திண்ணம். ஆதலின் நாலடியார் 1500-வருஷங்களுக்கு முற்பட்ட நூலாகுமென்னுமவர் கூற்றும் முன்னில்லாது பின்னடையும். (1899-வது வருஷத்திய எபிகிராபிகல்ரிபோர்ட்டு, 18-வது பக்கம், 50-வது பிரகரணமும், 1905-வது வருஷத்திய தஞ்சைத்தமிழகம் 44—47 பக்கமும், 1906 வது வருஷத்திய தஞ்சைத் தமிழகம் 138-144 பக்கமும், 169-175 பக்கமும் பார்க்க.)

இதுகாறும் செய்தவாராய்ச்சியின் பயனாக எமக்குத் தெரியவருவது நாலடியார் ஏழாவது நூற்றாண்டின் முன்னரைதிரிந்து பெரும்பாலும் எட்டாவது நூற்றாண்டில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதேயாகும். ஆயினும் இதுகாறும் கூறப்பட்டயாவும் பேரறிவாளர்கள் செய்யப்புகும் பேராராய்ச்சிகளுக்கு முன்னுரையேயாம். அவர்களது முடிவுரையே எமது முடிவுரையுமாகக் கொள்ளப்படும்.

டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரி.

௨

வானசாஸ்திரம்.

(உ௪௪-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இதுபோலவே ஒரு கலையிலிருந்து பூர்ணமாகும் வரை அதாவது புரட்டாசிமாதம் முதற் காலைவேளைகளிற் புலப்படக்காணலாம். புதனுக்குத் தானே ஒளிவிடுகின்ற சக்தி கிடையாது. மற்றக்கிரகங்களைக் காட்டிலும் புதன் சூரியனைச்சுற்றி விருத்தமாயோடாமற் கோழிமுட்டை வடிவாய் நீண்ட வட்டரேகையிற் செல்லுகிறதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகையாற் சூரியனுக்கும் இதற்குமுள்ள தூரம் பலவிதப்படுகிறது. இது சூரியனிலிருந்து அதிக தூரத்திலிருக்கும்போது 42669000 மைலினும், அதிக சமீபத்திலிருக்கும்போது 28115000 மைலினுமிருக்கிறது. இதன் உருவமும் அதற்குத்தக்கபடி மாறுகிறது.

இக்கிரகம் செகண்டு ஒன்றுக்கு 293 மைல்வீதம் சஞ்சரிக்கிறது. இதன் உருவத்தை அறிவது வெகு சுலபமாகிறது. எப்பொழுது ஒன்றற்கொன்றுள்ள வித்தியாசம் தெரிந்ததோ அதன்பரப்பும் தெரிவது கஷ்டமல்ல. இதன் குறுக்களவு 3000 மைல் எனக்கணக்கிடப் பட்டிருக்கிறது. அதாவது பூமியைக் காட்டிலும் ஐந்தில் மூன்று பங்கு சிறியது.

சூரியனுக்குச் சமீபத்திலோடுவதால் இது உருண்டையான விருத்த கோளமாயிருக்கிறதென்றாவது வட்டவடிவமாயிருக்கிறதென்றாவது அறியவியலாது அதன் ஜோதி மறைக்கின்றது. அன்றியும், கிரகங்கள் ஒன்றிலொன்று தட்டாதபடி சாய்வாகவேயமைந்திருப்பதால் ஒன்றின்மேலொன்று தாக்காது சென்றாலும் சில சமயம் ஒன்றையொன்று மறைத்துச் செல்லுகிறது. இப்படிச் செல்லுவதிற் புதன் சூரியனை மறைத்துச் செல்வதை வானசாஸ்திரிகள் வெகு கூர்மையாகப்பார்த்து அநேக கணக்கெடுத்திருக்கின்றனர்.

இதுவரையில் இதன் உருவம், கதி, வேகம், பரப்பு முதலியவைகளைப் பற்றிச் சொல்லப்பட்டது. இனி அது எத்தன்மையது என்று கவனிப்போம். பிராணிகளும் புற்பூடுகளும் அவற்றிற்கேற்ற சீதோஷ்ணஸ்திதிக்குத் தக்கபடி யுண்டாகி வளர்வனவாகக்காணப் படுகின்றன. அப்படியாயின் இதிலும் ஒரு புகைரூபமான படலமிருக்கிறதாவென்று கேள்வியுண்டாகும்.

1799-ம் வருஷத்திற் சூரியனை மறைத்துப் புதன் ஓடும்போது தூரதிருஷ்டிகொண்டு பார்க்கையில் வழக்கமாகப் புலப்படும் ஒரு கறுப்பு விருத்தத்திற்குவதிலாக ஒரு கறுப்பு விருத்தத்தையுள்ளிட்ட ஒளிபொருந்திய வலயமொன்று தோன்றிற்று. ஆயினும் அது இவ்வளவு அகலமுடையதென நிரூபித்தற்கு இயலாததாயிற்று. வானசாஸ்திரிகள் சாதாரணமாகப் புதனில் ஏதோ கொஞ்சம் ஒளி விளங்குவதாகக் கூறுகிறார்களேயன்றி அது இவ்வளவுதூரமுள்ளதெனச்சொல்ல வியலாதென்கின்றனர். ஆனாலும் அது ஒருவித உணர்வுடைய ஆகாசம் நிறைந்ததென்கிறார்கள். புதனிலுள்ள ஆகாசமும் அதனுட்பொதிந்திருக்கும் பதார்த்தங்களும் நம்மிடம் காணப் படும் பிராணவாயு கரியமலவாயுக்களைப்போலன்றிச் சீதோஷ்ணங்

கள் பேதப்பட்டிருக்கின்றன. புதன் தன்னைச்சுற்றி 24 மணி $5\frac{1}{2}$ நிமிஷத்திற்றிரும்பினும் அது வட்டத்திற் பூமியைவிடச் சாய்வாகவிருப்பதால் ருதுக்களில் வித்தியாசங்களேற்படுகின்றன. கார்காலமும் கூதிர்காலமும் அங்கேயில்லை. மத்தியரேகையிற் செல்லும் ருதுமாத்திரந்தானிருப்பதாற் சகலகாலமும் பகலில் உஷ்ணமும் இரவிற்சீதளமும் ஏற்பட்டிருக்கின்றன. அதுவன்றிப் புதன்வட்டம் விருத்தமாயிராமல் நீட்டுப்போக்கிலிருப்பதால் ஒரு கோளார்த்தத்திற்கு ஒரு கோளார்த்தம் ஏற்றத் தாழ்ச்சியான இராப்பகல்களைப் பொருந்தப் பெறுகின்றன. இது சூரியனுக்குச் சமீபத்திற் செல்லுவதால் அதன் மட்டம் இப்படிப்பட்டதென அறிவது கஷ்டமாயிருக்கிறது. இருந்தும், ஸ்குரோட்டர் என்பவர் 18-வது நூற்றாண்டின் கடைசியில் அதன் மத்தியில் ஒரு பட்டை யொன்று காணப்பட்டதாகச் சொல்லுகிறார். இதுவுமல்லாமல் அது பிறையாயிருக்கும்போது வடகோட்டைக்காட்டிலும் தென்கோடு கூரிய முனையாயிராமல் வெட்டப்பட்ட முனையைப்போற் காணப்படுகிறது. இது எப்போதும் காணப்படாததால் மலைகள் இருக்கின்றனவோ என ஊகித்தார்கள். பிறகு நன்றாயூன்றிப்பார்த்து அவைகள் ஒளியை மறைப்பதாகவும், ஒவ்வொன்று பதினொரு மைல் வரையில் உயர்வுடையதெனவும் கணக்கிட்டிருக்கின்றனர். அதில் ஒளியுஞ்சிறிது காணப்பட்டதைக்கொண்டு எரிமலைகளும் உண்டோவெனச் சந்தேகிக்கின்றனர். இக்கிரகம் சூரியனுக்குச் சமீபமாகச் செல்லும்போது அதனோடு மறைந்தே போவதுபோற் காணப்படுவதால் அப்பொழுது அஸ்தங்கதமாகிறதென்றும் 1......பாகை வரையில் அப்படியாகிறதென்றும் பிரகத் ஜாதகமுடையார் எழுதியிருக்கிறார். சூரியனிடத்துண்டான அதிர்ச்சி பூமியிற்குறிக்கப்பட்டதென மேலே சூரியனைப்பற்றிச் சொல்லியபோது கூறியிருப்பதாற் சூரியனுள் இந்தப் புதன் மறைபடுவது மனிதசமூகத்திற்கு உற்றதல்லவென்பதில் என்ன தடையிருக்கிறது. இதனாற் கிரகங்களுக்கும் மனிதசமூகத்துக்கும் சம்பந்தமுண்டென்பதும் ஒருதலை.

புதன் பூமியைவிட 112 முதல் 100 மடங்கு அதிக அடர்த்தியுடையதெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதனால் பளு மிகுதியாக மிகுதியாக ஆகர்ஷண சக்தியும் மிகுதியாகக் கூடுமாதலால்

பூமியை விடப் புதனது ஆகர்ஷண சக்தி சற்றேறக்குறைய ஐந்தில் இரண்டு மடங்கு அதிகம்.

சுக்கிரன்.

சூரியனிடத்திலிருந்து வரும்போது இரண்டாவது மண்டலத்திற் புலப்படுங் கிரகம் சுக்கிரனும். நம்மவர்கள் சுக்கிரன் என்பது இன்னதென்று தெரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை விடிவதற்குமுன் வெளியூர்களுக்குச் செல்லும் ஜனங்கள் கிழக்கு நோக்கிப் பார்த்து, ஆகாயத்தில் வெள்ளி முளைத்துவிட்டது ; விடியற்காலையாய் விட்டது ; எழுந்திருங்கள்; ஊர்செல்லுவோம்; என்று சர்வசாதாரணமாகச் சொல்லுவதால் அறியலாகும். இவ்வெள்ளியானது சித்திரை மாத முதல் ஐப்பசிமாதம் வரையிற் சூரியாஸ்தமனத்திற்குப் பிந்தியும், பிறகு விடியற்காலையிலும் புலப்படும். ஐரோப்பியர்கள் இப்படி வேறு தோன்றுவதால் வேறுவேறெனக்கொண்டு அந்திவேளையிற் றோன்றுவதற்கு வெஸ்பர் (Vesper) என்றும், காலையிற்றோன்றுவதற்கு லூசிபர் (Lucifer) என்றும் வெகுகாலம் வரையிற் பெயரிட்டு வ்ழங்கிவந்தனர். இவையிரண்டும் ஒன்றெனத்தெரிந்தபிறகே அதற்கு வேனஸ் (Venus) என்று பெயரிட்டனர்.

சுக்கிரனனது தனது வட்டத்திற் சற்றேறக்குறையச் சக்கிராகாரமுடையது. அதனது மந்தோச்சம், சீக்கிரோச்சம்—அதாவது தூரம் அல்லது சமீபத்திலிருக்கும்போது—நூற்றுநாற்பத்தைந்திலொருபாகந்தான் வித்தியாசப்படுகிறது. சுக்கிரனுக்கும் சூரியனுக்குமுள்ள மத்திய தூரம் 66,134,000 மைல். அதிக தூரம் 66,586,000 மைலும், குறைந்த தூரம் 65,682,000 மைலுமாம். சூரியனிலிருந்து சுக்கிரன் 49 பாகை (Degrees) வரையிற் சென்று மீள்கிறது.

சுக்கிரன் 584 நாட்களிற் சூரியனைச்சுற்றி ஓடிவருகிறதென்பது ஐரோப்பியருடைய சித்தாந்தம். இதற்கு சினடிகல் ரிவலியூஷன் என்று பெயர். நக்ஷத்திரமானப்படி ஒரு சுற்றுச்சுற்றிவர 224-நாள், 16-மணி 49-நிமிஷம் 7-செகண்டு அல்லது 225-நாட்கள் செல்லுமென்பர் ஆங்கிலேயர். நமது பூர்வீகர்களோ சுக்கிரனது நித்தியகதி 1 பாகை 36 கலை 8 விகலை என்று முன் காலத்திலேயே கணக்கிட்

டிருக்கின்றனர். இதன்படி 360 டிகிரி அல்லது பாகைக்குக் கொடுக்க அந்த 225-நாட்களே வரும். இந்தக்கிரகம் மணி ஒன்றுக்கு 78000-மைல் வீதம் சஞ்சரிக்கின்றது.

சுக்கிரனது குறுக்களவு 7510 மைல் என்று கணக்கிட்டிருக்கின்றார்கள். இந்தக் கிரகம் பூமிக்கு வெகு சமீபத்திலுள்ளதாயினும் இதனுடைய ஒளியினால் இதனைக் கூர்மையாகப் பரிசோதித்தல் கஷ்டமாகிறது. சுக்கிரன் தன்னைச்சுற்றித் தானே 23-மணி 21-நிமிஷம் 23-செகண்டில் பிரமணஞ்செய்கிறது. சுக்கிரன் சக்கிரமாயும் ஒரே சமமான தூரத்திலுமிருப்பதால் ஏற்றத்தாழ்வற்ற பிரகாசத்தைச் சூரியனிடமிருந்து பெறுகிறது.

பூமி.

இதுவரை சுக்கிரனைப்பற்றிக் குறிப்பிட்டோம். இதற்கு அடுத்த கிரகமான பூமியைப்பற்றி வியவகரிப்போம். இப்பூமியானது இதுவரையிற் சொல்லிய புதன், சுக்கிரனைப்போற் றனிமாத்திரம் சஞ்சரிக்காது, தனக்கு உபக்கிரகமாகச் சந்திரனையும் இழுத்துச் செல்லுகிறது. உபக்கிரகங்களுடன் சஞ்சரிக்கும் கிரகங்களிற் பூமிதான் முதன்மையானது. இப்பூமியைவிட்டு நடு ஆகாசத்திலிருந்து ஒரு மனிதன் பூமியைப் பார்ப்பதாக வைத்துக்கொள்வோமானால் அவனுக்கு இப்பூமியானது ஒரு சக்கிரத்தைப்போற் காணப்படும். அதிலுள்ள பூபாகமும் மலை முதலியவைகளும் பிரகாசம் பொருந்திய விடமாயும், சமுத்திரங்கள் இருள் சூழ்ந்தனவாயும் தோன்றும். இது ஏறக்குறையக் கோளவடிவுடையது. இதன் குறுக்களவு சந்திரனைக் காட்டிலும் நான்கு பங்கு அதிகமானதாகையால் பதின்மூன்று சந்திரர்கள் ஏக காலத்திற் கூடினாலுண்டாகும் ஒளியைப்போற் பிரகாசிக்கும். ஆயினும் இதனைக் கண்ணுறுபவர் தூரத்திற் செல்லச் செல்ல இதுவும் ஆகாயத்திற்றோன்றும் கிரகங்களைப்போல ஒரு சிறு அளவினதாகவே கண்ணுக்குப் புலப்படும்.

நாம் சாதாரணமாகப் பூமி விருத்தாகாரமாகவிருக்கிறதென்று முன்னமே கணக்கிட்டிருந்தபோதிலும் இப்பொழுது ஐரோப்பிய

சாஸ்திரிகள் செய்யும் திரிகோண சர்வே * (Trigonometrical Survey) யாலும் ஸ்தாபித்திருக்கின்றனர். இதுவன்றி, நாம் நம்மைச்சுற்றி ஆகாயத்தை அண்ணாந்து பார்ப்போமாயின், அது விருத்தமாகத் தோற்றக்காண்கிறோம்; அதனைத்தான் கபாலமென்றும், அநுமானவானம் (Horizon) என்றும் கூறுகிறோம். நாம் நகர்ந்து செல்லச் செல்ல நாம் காணும் விருத்தாகாரமும் கூடவே வருகிறது. இதுமட்டுமல்ல: நாம் கப்பலேறிச் செல்லுவோமாயின் அங்கு இது பிரத்தியக்ஷமாகத் தெரியவரும். எப்பொழுதும் சக்கிராகாரமாகவிருக்கும் பொருளேதான் எங்கு நின்று பார்த்தாலும் விருத்தமாகத் தோன்றுமென்பது சித்தாந்தமாகையால் இவ்வுலகமும் சக்கிரமாயிருக்கிறதென்றேற்படும். ஏற்கனவே கூறிய கபாலமானது நாம் பூமிக்கு மேல் உயரச்செல்ல விரிவாகின்றது. அதாவது நாம் ஒருமலையடிவாரத்திலிருப்பதாகக் கொள்ளுவோம். அங்கு நின்று பார்க்கும் போது கொஞ்ச தூரம் விருத்தாகாரமாகத் தெரிகிறது. அந்த மலையிற் பாதி ஏறி நின்று பார்க்கும்போது ஏற்கனவே நாம் கண்ட காக்ஷிக்கு மேலே தெரிகிறது. உச்சியிலேறிப் பார்க்கும்போது இன்னும் அதிகமான விருத்தமாகவே தெரிகிறது. இன்னும் சமுத்திர மட்டத்தில்இந்தவளைவுசெவ்வனேவிளங்குகிறது. ஒருவன்சமுத்திரக் கரையோரத்தில் ஒரு உன்னதமான கட்டிடத்திலிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அவன் சமுத்திரத்தை யுற்றுநோக்குகையில் ஒரு கப்பல் வருமாயின் முதலில் அதன் பாய்மரம் மாத்திரம் புலப்படும். சமீபமாக வர வர முழுக்கப்பலும் காணப்படுகிறது. அது போலவே கப்பலிலிருப்பவர்களுக்கும் பூமி புலப்படுகிறது. சமுத்திரத்தின் வளைவு எப்பக்கத்திலும் ஒரே மாதிரியாகையாற் பூமியும் அப்படிப்பட்ட வளைவுடையதாயிருக்கவேண்டுமென்பது சித்தாந்தம். இன்னுமோர் திருஷ்டாந்தம் கூறுவோம். நாமெல்லோரும் வடக்கிலுள்ள சப்தரிஷி மண்டலத்தையறிவோம். அது இடம் விட்டுப்

* திரிகோண சர்வேயாவது பூமியில் சமதரையான இரண்டு இடங்களையளந்துகொண்டு அதினின்றும் மற்ற எல்லா விடங்களையும் தியாடலைட் என்னும் பாகையளக்கும் கருவிகொண்டு பார்த்து அதன் மூலமாகத் தூரங்களைக் கணக்குச் செய்தல். நமது நாடுகளிற் பெருங்கோபுரங்கள் முதலியவைகளில் இவர்களது அடையாளமான ஒரு முக்கோணமும் அதன்கீழ் G. T. S. என்ற எழுத்தும் இருப்பதைக் காணலாம்.

பெயர்ந்து செல்லும் கதியுடையதன்று என்பதோடு நாம் எந்த ஊரிற்போய்ப் பார்த்தபோதிலும் ஆகாயத்தில் முன்னர் எங்குப்பார்த்தோமோ அங்கேயே காணப்படும். இப்பொழுது அதனை நாம் தெற்கு நோக்கி வெகுதூரம் சென்று பார்ப்போமாயின் அதுவும் மெள்ள மெள்ள அடிவானத்தைச் சமீபிக்கக் காண்போமாயினும் உண்மையில் அது இருந்த தூரத்திலேயேதானிருக்கிறது. இதை விட்டுக் கிழக்கு அல்லது மேல்புறமாகச் செல்லுவோமாயின் நாம் கண்டவிடத்தும், அதே தூரத்திலும் காணப்படுவதல்லது வேறு சலனமிராது. அது காணப்படும் காலத்தில்மட்டும் வித்தியாசமுண்டாகக்கூடும். இவைகளாற் பூமியானது கோளவடிவின தென்பது நிதர்சனமாம்.

அப்படியாயினும் பூமியானது முழுவிருத்தவடிவமாகவில்லை என்பது அதனேப்பல விடங்களிற் சோதித்துக் கண்டறியப்பட்டிருக்கிறது. பூமி உத்தர தக்ஷிண துருவங்களிடத்தில் தட்டையாக விருக்கின்றது. அப்படியில்லாதவரையில் மத்தியரேகை (Equator நிரக்ஷ ரேகை) யின் மத்தியத்திலிருந்து சமபாகமுள்ள அதாவது ஒருபாகை கொண்ட பாகங்களாகத் துருவங்கள்வரை பிரிப்போமாயின் அவை பூமியானது விருத்தமான கோளமாகவிருக்குமாயின் சம அளவுடையனவாயிருக்கவேண்டும்; அவ்வாறின்றி வர வர அதிகமான அளவுடையனவாயிருக்கின்றன.

அவைகளின் வித்தியாசங்கள் கீழே குறிக்கப்படுகின்றன.

தேசம்.	அக்ஷாம்சம்.			ஒரு பாகையின் இங்கிலீஷ் மைல்.
	°	i	ii	
இந்தியா	12.	32.	20.	362,956
,,	16.	8.	21.	363044
அமெரிக்கா	39.	12.	0.	363786
இத்தாலி	42.	59.	0.	364262
பிரான்ஸ்	44.	51.	2.	364572

இங்கிலாந்து	52.	2.	19.	364951
டென்மார்க்கு	54.	8.	14.	365087
உருஷியா	56.	3.	55.	365291
*ஸ்விடன்	66.	20.	10.	365144

இவ்விதமாக வித்தியாசம் காணப்படினும் கிச்சிலிப்பழத்தைப் போல் தட்டையாகவிருக்கிறதென்றும் சொல்வதற்கில்லை. பூதத்துவ நிபுணர்கள் அளந்துபார்த்தவகையில் வெகுசுவல்பமாகவே இருக்கிறதென நிர்ணயித்திருக்கின்றனர்.

இவ்விதமாகப் பூமி கோளவடிவினதென்றும், அதுவும் ஒரு கிரகம்போல அந்தரத்தில் நிற்பதென்றும் மேலே கூறினோம். அவ்விதமாயின் பூமியின்மேற் காணப்படும் உன்னத சிகரங்களையுடைய பர்வதங்களும், 'ஆழாழி' யின் எல்லையும் எவ்வளவென ஆய்வோம். இதுவரையிற் கண்டுபிடிக்கப்பட்ட உன்னத சிகரங்களையுடையவை இமவரையிலுள்ள கௌரிசங்கரம், அல்லது கைலாச பர்வதமும், கின்சின் செங்கா என்பதுமேயாம். அவை பூமிவிட்டத்தில் இரண்டாயிரத்தில் ஒரு பாகமே 1 / 2000 உயர்வுடையதாம். சமுத்திரத்தின் ஆழமோ பதினாயிரத்திற் பதினைந்துபாகம் அங்குலம் (15/10000 Inch) அளவுடையது.

முன்சொன்ன துருவபக்கங்களிற் பூமி தட்டையாகவிருப்பதால் நிரக்ஷரேகையின் சுற்றளவைக்காட்டிலும் மத்திமரேகையினளவு 42 மைல் குறைவாயிருக்கின்றது. இந்த அளவைக்கொண்டு பூமியின் பரப்பு 196,626,000 சதுரமைல் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த அசாத்தியமான அளவில் முக்காற்பங்குநீரால் நிறைந்திருக்கிறது. பாக்கியிருக்கும் காற்பாகந்தான் நாம்காணும் பெரிய தேசங்களும், பல சிறு தீவுகளுமாம். இப் பூமியின் பரப்பை அறிந்தமாத்திரத்தில் அதன் கனத்தையறிவது அசாத்தியமல்ல. அறிவாளிகள் இதன்கனம் 259,800,000,000 கனமைல் என்றும், அதனை நிறையாக்கும்போது 6,069,000,000,000,000,000,000

* நெருப்புப் பெட்டிகள் அதிகமாகச் செய்துவரும் தேசமும், ஐரோப்பாவில் அதிக வடக்கிலுமுள்ள தேசமுமாம்.

டன் என்றும் கணக்கிட்டிருக்கின்றனர். இதுவும் சராசரி என்றும் ஏகதேசமாகக் கனதியிருக்கிறதேயன்றி எங்கும் நிரந்தரமாகக்கனதி இல்லையென்றும் சொல்லப்படுகிறது. முக்காற்பாகம் நீராற்சூழப் படினும் நீரைவிடப் பூபாகம் $5\frac{1}{2}$ மடங்கு கனமுடையதென்றும் அறிவிக்கப்படுகிறது. இவ்வளவு கனமும் விசாலமுமுடையதாயிருந்தும் இவ்வுலகம் சூரியனோடும், ஆகாயத்தோடும் ஒப்பிடும்போது சாதாரண ஒரு சிறு கிரகத்துக்கு ஒப்பிடவேண்டியிருக்கிறதேயொழிய வேறன்று. அளவிடற்கரியதும், மனதினால் ரூபகாரம் செய்ய முடியாததுமான இப் பூமியே இவ்வளவு அற்பமாக எண்ணப்படுமானால் ஆகாயத்தை மனத்தால் உள்ளுதலும் சாத்தியமாமோ.

மேலே கூறிய பூமியின் நிறை நம்மைச் சூழ்ந்திருக்கும் வாயுவை நீக்கியேயாம். வாயுமண்டலம் 37 மைல் உயரத்துக்கு மேலாக வியாபித்திருந்தாலும் அதுவரை வியாபித்திருப்பதாகக்கொண்டு கணக்கிடுவோமாயின் 5,178,000,000,000,000 டன் நிறையுடையது. இந்த வாயுமண்டலத்தால் புல், பூடு பிராணிகளுக்குண்டாகும் நன்மை இதுவாகுமென அறியாதாரொருவருமில்லை. இந்த வாயுமண்டலத்தின் கனதிக்குத்தக்கவாறு சீதோஷ்ணமாறுகிறதென்பதும், அதனையுற்றே மலைச்சிகரங்களில் குளிர்ச்சி மிகுதியாகவிருக்கிறதென்பதும் நாம் கண்கூடாகக்காணும் காக்ஷியாம். இதுவன்றிச் சூரிய கிரணங்கள் இந்த வாயுமண்டலத்தினூடே சென்று பூமிக்கு வருவதால் இதனாலுண்டாகும் வேறுபாடுகள் பலதிறப்பட்டனவாகும். ஒளியானது ஏக கனதியுடைய ஒரு வஸ்துவை யூடுருவிச்செல்லும் போது நேரே தாக்குமென்பதும் நாமறிவோம். இந்த ஒளி எதனிடத்துண்டாகிறதோ அந்த வஸ்துவையும் அதற்கு நேரே காண்போம். அப்படியில்லாமற் சாய்வாகப் பலதிறப்பட்ட கனதியுடைய வஸ்துக்களைத்தாண்டி ஒளி செல்லவேண்டுமாயின் அது தான்வரவேண்டிய நேர்வழியை விட்டு விலகி விலகி வரவேண்டியதாகிறது. அப்பொழுது நாம் ஒளியைத்தரும் ஆதிப்பொருளை நோக்குவோமாயின் அது வாஸ்தவமாகவிருக்கவேண்டிய விடத்தைவிட்டு அதைவிட உயர்ந்தபாகத்தில் தோற்றும். இது வாயுமண்டல வக்கிர (Atmospheric Refraction) மெனப்படும். வானசாஸ்திரத்தில் இந்த வக்கிரம் வெகு முக்கியமானதெனச் சொல்லவேண்டிய

தில்லை. ஆகாயவலயத்தில் இருக்கும் கிரகாதிகளுக்கு இந்தவக்கிரமும் ஒரே ரீதியாக அமைந்ததுமன்று. அவை அநுமானவானத்துக்குச் சமீபமாய்த் தோற்றும்போது அதிகமாக ஏற்படும். இப்படி அது தோன்றவேண்டியவிடத்தை விட்டு உயரத்தோற்றுவதாற் காலங்கடந்தும் ஒளியைக்காண்கிறோம். இதனாற்றான் பகல்மானமென்னும் அகஸ் அதிகமாக ஏற்படுகிறது. அதாவது சூரியன் தொடுவானத்திற்குக் கீழ்ச்சென்றபோதும் அதன் ஒளி மேலே செல்லப் பூமி இருளில் மூழ்கவும், மேலே சென்ற ஒளி பூமியில் பிரதிபலிப்பதால் அருணோதயமும், அந்திமாலைச் சிறப்புமுண்டாகிறது. இந்த அருணோதயமும், அந்தியும் அக்ஷாம்சத்திற்கும், ருதுக்களுக்கும் தக்கபடி மாறுமென்பது சொல்லாமலே விளங்கும். *

(தொடரும்.)

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

உ

சிவமயம்.

சைவாகமமிருபத்தெட்டு.

திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய் தறிதற்கரும் பெற்றி யெய்தி
யருவந் தனையு முருவத்தையு மன்றி நின்ற
வொருவன் றனது பதந்தன்னை யுளத்துள் வைப்பாம்.

காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்

* சூரியசித்தாந்தமென்னும் நமது பூர்வீக கிரந்தத்தில் புவனகோசாத்தியாயத்தில் சூரிய ஒளி வடக்கில் அதிகமாகத் தென்படும் என்று சொல்லியிருப்பது இங்குக் கவனிக்கத்தக்கது. செர்தமிழ்த் தொகுதி ௧௦. பகுதி-௩.

திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தான சருவோத்தம், பாரமெசுரம், கிரணம், பேதம், வாதுளம் என்பன சைவாகமங்களாம்.

இவைகளினுற்பத்தி.

நின்மலராகிய சதாசிவமூர்த்தி சாதாக்கிய தத்துவத்தில் எழுந்தருளியிருந்து நிறைந்த ஆன்மாக்களெல்லாம் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் விரும்பியடையும் பொருட்டு மேற்கூறப்பட்ட ஆகமங்களை அருளிச்செய்தார்.

இவ்வாகமங்களெல்லாம் ஞானேதயத்துக்குக் காரணமாகிய சுத்தவித்தியாதத்துவத்தி லிருக்கும்.

இவற்றின்றோற்றம் உற்பத்திக்கிரமமெனவும், சங்காரக்கிரமமெனவும் இருவகைப்படும். அவற்றுள், உற்பத்திக் கிரமமாவது ஈசானமுதற் சத்தியோசாதமீறுகக் கூறுவது. சங்காரக்கிரமமாவது சத்தியோசாதமுதல் ஈசானமீறுகக் கூறுவது. இவை, சதாசிவமூர்த்தியால் அநந்தேசுரருக்கும் அநந்தேசுரரால் ஸ்ரீகண்டருக்கும் ஸ்ரீகண்டரால் தேவர்களுக்கும் தேவர்களால் முனிவர்களுக்கும் முனிவர்களால் மனுடர்களுக்கும் மனுடர்களால் மனுடர்களுக்கும் உபதேசிக்கப்படும். இங்ஙனமுபதேசிக்கப்படுங்கால் உளவாகிய சம்பந்தம் ஆறு. அவையாவன பரசம்பந்தம், மகாசம்பந்தம், அந்தராளசம்பந்தம், திவ்வியசம்பந்தம், திவ்வியா திவ்வியசம்பந்தம், அதிவ்வியசம்பந்தம் எனப்படும்.

சதாசிவமூர்த்தியுடைய ஐந்துமுகங்களுளொன்றாகிய சத்தியோசாதமுகத்தினின்றும் காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம் என்னும் ஐந்தாகமங்களும் கௌசிக விருடியின் பொருட்டுத் தோன்றின. இவ்வாகமங்களின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை சிவமூர்த்தி. பூமியின்கண் இவ்விருடி கோத்திரம் சிவகோத்திரமெனப்படும்.

விளங்காநின்ற வாமதேவ முகத்தினின்றும் தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம் என்னும் ஐந்தாகமங்களுங் காசிபவிருடியின்பொருட்டுத் தோன்றின. இவ்வாகமங்களின்படியே

இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை ஈசுரன். பூமியின்கண் இவ்விருடிகோத்திரம் சிகாகோத்திரமெனப் படும்.

அகோரமுகத்தினின்றும் விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம் என்னும் ஐந்தாகமங்களும் பாரத்துவாச விருடியின்பொருட்டுத்தோன்றின. இவ்வாகமங்களின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை ஈசானன். பூமியின்கண் இவ்விருடிகோத்திரம் சோதிகோத்திரமெனப்படும்.

தற்புருட முகத்தினின்றும் ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம் என்னும் ஐந்தாகமங்களுங் கௌதமவிருடியின்பொருட்டுத் தோன்றின. இவ்வாகமங்களின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை பிரம்மமூர்த்தி. பூமியின்கண் இவ்விருடிகோத்திரம் சாவித்திரிகோத்திரமெனப்படும்.

ஈசானமுகத்தினின்றும் புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சருவோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்னும் எட்டாகமங்களும் அகத்திய விருடியின்பொருட்டுத் தோன்றின. இவ்வாகமங்களின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை நடேசமூர்த்தி. பூமியின்கண் இவ்விருடிகோத்திரம் வியோம கோத்திரமெனப்படும்.

இவ்விருபத்தெட்டாகமங்களுள்ளும் காமிகம் முதலிய பத்தும் விஞ்ஞானகலருட் பரமசிவனது அநுக்கிரகத்தைப்பெற்ற பிரணவர் முதலிய பத்துச்சிவன்களுக்கும் அருளிச்செய்யப்பட்டமையாற் சிவபேதமெனவும், விசய முதலிய பதினெட்டும் இவ்வாறு பரமசிவன்பால் உபதேசம்பெற்ற அநாதிருத்திரர் முதலிய பதினெட்டுருத்திரர்களுக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் உருத்திரபேதமென்றுஞ்சொல்லப்படும்.

இச்சிவாகமங்கள் சித்தாந்தமெனவும், மாந்திரமெனவும், தந்திரமெனவும் பெயர்பெறும்.

இவ்வாகமங்களுக்குக் கிரந்த சங்கியை சொல்வாம்—காமிகத்துக்குப் பரார்த்தம், யோகசத்துக்கு இலக்ஷம், சித்தியத்துக்கு இலக்ஷம், காரணத்துக்குக் கோடி, அசிதத்துக்கு நியுதம், தீப்தத்துக்கு நியுதம், சூக்குமத்துக்குப் பதுமம், சகச்சிரத்துக்குச் சங்கம், அஞ்சுமானுக்கு ஐந்திலக்ஷம், சுப்பிரபேதத்துக்கு மூன்றுகோடி, விசயத்துக்கு மூன்றுகோடி, நிச்சுவாசத்துக்குக் கோடி, சுவாயம்வத்துக்கு ஒன்றரைக்கோடி, ஆக்கினேயத்துக்கு முப்பதினாயிரம், வீரத்துக்கு நியுதம், ரௌரவத்துக்கு எட்டர்ப்புதம், மகுடத்துக்கு இலக்ஷம், விமலத்துக்கு மூன்றிலக்ஷம், சந்திரஞானத்துக்கு மூன்றுகோடி, முகவிம்பத்துக்கு இலக்ஷம், புரோற்கீதத்துக்கு மூன்றிலக்ஷம் இலளிதத்துக்கு எண்ணாயிரம், சித்தத்துக்கு ஒன்றரைக்கோடி, சந்தானத்துக்கு ஆறாயிரம், சர்வோக்தத்துக்கு இரண்டுலக்ஷம், பாரமேசுரத்துக்குப் பன்னிரண்டு லக்ஷம், கிரணத்துக்கு ஐந்துகோடி, வாதுளத்துக்கு லக்ஷம்.

இவைகள் முறையே ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என்ற நான்கு பாதங்களையுடையனவாயிருக்கும். இவற்றுள் ஞானபாதத்தில் பரமசிவனுடைய சொரூபமும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவம், காமியம் மாயேயம் வைந்தவம் திரோதானசத்தியென்னும் பாசங்களின் சொரூபமும், சத்தியின் சொரூபமும், சிவதத்துவ முதற் பிருதிவிதத்துவவரையுமுள்ள முப்பத்தாறு தத்துவங்களதுற்பத்தியும், ஆன்மாக்கள் போகம்புசிக்கைக்குக் கருவியாமுறைமையும் புவனங்கள் புவனேசர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப் பிரமாணங்களும், அதமப்பிரளயம் மத்திமப்பிரளயம் மகாப்பிரளயங்களின் சொரூபமும், அந்தப்பிரளயங்களின் பின்னர்ச் சிருட்டியாமுறைமையும், பாசுபதம் மகாவிரதங் காபால முதலிய மதங்களின் சொரூபமும் கூறப்படும். கிரியாபாதத்தில் மந்திரங்களினுத்தாரணஞ் சந்தியாவந்தனம் பூசை செபமோமங்களும், சமய விசேட நிருவாண ஆசாரியாபிடேகங்களும், புத்தி முத்திகளுக்குபாயமாகிய தீக்கையுங் கூறப்படும்.

யோகபாதத்தில் இந்த முப்பத்தாறு தத்துவங்களும், தத்துவேசுரரும், ஆன்மாவும், பரமசிவனும், சத்தியும், சகத்துக்குக்காரண

மாகிய மாயை மகாமாயைகளைக் காணும் வல்லமையும், அணிமாதி சித்திகளுண்டாமுறைமையும், இயமம் நியமம் ஆசனம் பிராணுயாமம் பிரத்தியாகாரம் தியானம் தாரணம் சமாதிகளினுடைய முறைமையும், மூலாதார முதலிய ஆதாரங்களின் முறைமையும் கூறப்படும்.

சரியாபாதத்தில் பிராயச்சித்த விதியும், பவித்திரவிதியும், சிவ லிங்கலக்கணமும், உமாமகேசுர முதலிய வியத்தாவியத்த லிங்கங்களினிலக்கணமும், நந்திமுதலிய கணநாத ரிலக்கணமும், செபமாலை யோகபட்டம் தண்டம் கமண்டல முதலியவற்றினிலக்கணமும், அந்தியேட்டி விதியும், சிராத்தவிதியுங் கூறப்படும்.

சிவபெருமானுக்குக் காமிகம் திருவடிகளும், யோகசம் கணைக் கால்களும், சிந்தியம் திருவடிவிரல்களும், காரணம் கெண்டைக் கால்களும், அசிதம் முழந்தாள்களும், தீப்தம் தொடைகளும், சூக்குமம் குய்யத்தானமும், சகச்சிரம் கடித்தானமும், அஞ்சுமான் முதுகும், சுப்பிரபேதம் கொப்பூழும், விசயம் உதாமும், நிச்சுவாசம் நாசியும், சுவாயம்புவம் முலைகளும், ஆக்கினேயம் கண்களும், வீரம் கழுத்தும், ரௌரவம் செவிகளும், மகுடம் திருமுடியும், விமலம் கைகளும், சந்திரஞானம் மார்பும், முகவிம்பம் திருமுகமும், புரோற்கீதம் திருநாக்கும், இலளிதம் கபோலங்களும் சித்தம் திருநெற்றியும், சந்தானம் குண்டலமும், சருவோத்தம் உபவீதமும், பாரமேசுவரம் ஆரமும், கிரணம் இரத்தினுபரணங்களும், வாதுளம் திருப்பரிவட்டமும், காலோத்தரம் திருமேற்பூச்சும், மற்றை உபாகமங்களெல்லாம் பரிமளதிரவிய புஷ்பங்களும், சைவசித்தாந்தம் நைவேத்தியமுமாம்.

இவ்விருபத்தெட்டாகமங்களும் சிவபெருமானிடத்தினின்றும் முதலிற்றோற்றினமையால் மூலாகமமெனப்படும் இவற்றின் வழித் தோன்றலாகிய இருநூற்றேழும் உபாகமங்களெனப்படும்.

காமிகத்துக்கு உபபேதம் மூன்று. யோகஜத்துக்கு உபபேதம் ஐந்து. சிந்தியத்துக்கு உபபேதம் ஆறு. காரணத்துக்கு உபபேதம் ஏழு. அசிதத்துக்கு உபபேதம் நான்கு. தீப்தத்துக்கு

உபபேதம் ஒன்று. சூக்குமத்துக்கு உபபேதம் ஒன்று. சகச்சிரத்துக்கு உபபேதம் பத்து. அஞ்சுமானுக்கு உபபேதம் பன்னிரண்டு. சுப்பிரபேதத்துக்கு உபபேதம் ஒன்று. விசயத்துக்கு உபபேதம் எட்டு. நிச்சுவாசத்துக்கு உபபேதம் எட்டு. சுவாயம்புவத்துக்கு உபபேதம் மூன்று. ஆக்கினேயத்துக்கு உபபேதம் ஒன்று. வீரத்துக்கு உபபேதம் பதின்மூன்று. ரௌரவத்துக்கு உபபேதம் ஆறு. மகுடத்துக்கு உபபேதம் இரண்டு. விமலத்துக்கு உபபேதம் பதினாறு. சந்திரஞானத்துக்கு உபபேதம் பதினான்கு. முகவிம்பத்துக்கு உபபேதம் பதினைந்து. புரோற்கீதத்துக்கு உபபேதம் பதினாறு. இலளிதத்துக்கு உபபேதம் மூன்று. சித்தத்துக்கு உபபேதம் நான்கு. சந்தானத்துக்கு உபபேதம் ஏழு. சர்வோத்தத்துக்கு உபபேதம் ஐந்து. பரமேசுரத்துக்கு உபபேதம் ஏழு. கிரணத்துக்கு உபபேதம் ஒன்பது. வாதுளத்துக்கு உபபேதம் பன்னிரண்டு. இவற்றின் பெயர்களைக் காமிகமுதலியவற்றிற்காண்க.

தனித்தனி மூலாகமங்களைக் கேட்டவர்களது தொகை.—சிவபேதம் பத்தையும் கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவ்வோராகமத்துக்கு மும்மூன்று பேராய் அணுசதாசிவருட்டலைவராகிய பிரணவர் முதன் முப்பதின்மராவர். அவர்கள் பெயர் வருமாறு:—காமிகங் கேட்டவர் பிரணவர், திரிகலர், அரர். யோகசங்கேட்டவர் சுதாக்கியர், பஸ்மர், விபு. சிந்தியங்கேட்டவர் சுதீப்தர், கோபதி, அம்பிகை. காரணங்கேட்டவர் காரணர், சர்வருத்திரர், பிரகேசர். அசிதங்கேட்டவர் சுசிவர், சிவர், அச்சுதர். தீப்தங்கேட்டவர் ஈசர், திரிமூர்த்தி, உதாசனர். சூக்குமங்கேட்டவர் சூக்குமர், வைச்சிரவணர், பிரபஞ்சனர். சகச்சிரங்கேட்டவர் காலர், வீமர், தருமர். அஞ்சுமான் கேட்டவர் அம்பு, உக்கிரர், ஆதித்தர். சுப்பிரபேதங் கேட்டவர் தேசேசர், விக்கினேசர், சசி. உருத்திரபேதம் பதினெட்டையுங் கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவ்வோராகமத்துக்கு இவ்விரண்டு பேராய் அநாதிருத்திரர்முதன் முப்பத்தறுவராவார். அவர் பெயர் வருமாறு:— விசயங்கேட்டவர் அநாதிருத்தரர், பரமேசர். நிச்சுவாசங்கேட்டவர் தசார்ணர், பார்ப்பதி. சுவாயம்புவங் கேட்டவர் நிதனேசர், பத்மபூ. ஆக்கினேயங்கேட்டவர் வியோமர், உதாசனர். வீரங்கேட்டவர் தேசர், பிரசாபதி. ரௌரவங்கேட்டவர்

பிரமேசர், நந்திகேசர். மகுடங்கேட்டவர் சிவர், மகாதேவர். விமலங்கேட்டவர் சருவாத்மர், வீரபத்திரர். சந்திரஞானங்கேட்டவர் அநந்தர், பிருகஸ்பதி. முகவிம்பங்கேட்டவர் பிரசாந்தர், ததீசி. புரோற்கீதங்கேட்டவர் சூலி, கவசர். இலளிதங்கேட்டவர் ஆலயேசர், இலளிதர். சித்தங்கேட்டவர் விந்து, சண்டேசர், சந்தானங்கேட்டவர் சிவநிஷ்டர், அசம்பாதர். சருவோத்தங்கேட்டவர் சோமதேவர், நிருசிங்கர். பாரமேசுரங் கேட்டவர் சீதேவி, உசனர். கிரணங்கேட்டவர் தேவவிபு, சம்வர்த்தர். வாதுளங்கேட்டவர் சிவர், மகாகாளர்.

(தொடரும்.)

காரை. மு. சபாரத்தின ஐயர்,
தமிழ்ப்பண்டிதர்.

உ

ஐயவினாவுக்கு விடை.

இங்கே எழுதப்படும் விடைகளைச் சென்ற மாசிமாதம் வெளிப்பட்ட செந்தமிழ்ப் பத்திரிகையிற் றோற்றிய ஐயவினாக்களோடு சேர்த்துப் பார்த்துக்கொள்க.

க. இடுகுறிப்பெயர்.

உ. காரணப்பெயர்.

௩. வேலாயுதப்பிள்ளை என வலித்தெழுதுதலே வழாநிலையாகும். வேலாயுதன் என்னும் பெயரோடு பிள்ளை என்னும் பெயர் வந்து இயைக்து இருபெயரொட்டாகாமையின் னகாரம் கெடுதலும் பகாரம் மிகுதலுமாகிய இருவிகாரங்களும் உளவாயின. "சிலவிகாரமாமுயர்திணை" என்னும் நன்னூலே இதற்கு விதியாகும். வேலாயுதன், சுந்திரன், வேங்கடாசலன் முதலிய நாமங்களைச் சிலர், வேலாயுதம், சுந்திரம், வேங்கடாசலம் முதலியனவாக எழுதி மகரவீறுக்குவர். மகரவீறுகள் கடவுளர் நாமங்களாயும், உயர்திணையாயும் கொள்ளற்கியைவனவல்ல. அவை பிள்ளை முதலிய உயர்திணைப் பெயர்

களோடு இயைவனவுமல்ல. இன்னும் இறுதி நீக்கி அகர வீறாயுஞ் சிலர் வழங்குவர். அவையெல்லாம் வழாநிலையுடையனவல்ல.

௪. தமிழ் மொழியன்று.

௫. தற்குறிப் பேற்றம் என்னும் அலங்காரம் உணருங்கால் ஐயம் அகலும்.

௬. பாலுளடங்காது புறத்து நிற்கும் பொதுமையறிக.

௭. முக்கடனோக்கி நின்றது. விலக்கன்று.

௮. விகாரத்தியல்பு.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகரும் பாலவநத்தம் ஜமீந்தாருமாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவரவர்கள்

காலஞ்சென்றது பற்றி, மதுரைத் தமிழ்ச்சங்க வித்வானும், இளையான்குடி மாஜி ஸ்பெஷல்மாஜிஸ்டிரேட்டும், யூனியன் சேர்மெனுமாகிய சாஹிப் பஹதூர் எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் பாடிய,

கையறு நிலை.

நிலமகட்கு வதனமென நிலவுதலான்
முகவையென நிகழ்த்து மூர்க்குத்
திலகமென வெழில்படைத்துத் தமிழ்மணங்கான்
றினிதிருந்த செல்வக் கோவே
நலமமையுங் குணங்களெல்லாம் பெறுபாண்டித்
துரையேநன் னாவல் லோர்கள்
பலருமன மிரங்கியழப் பிரிந்தனையாம்
புரிந்தபெரும் பாவ மென்னே. (௧)

எத்தனைபேர் பிரசங்கம் பிரசங்க
மெனப்பெயர்வைத் தியற்றி னாலும்
அத்தனையும் நின்னொருநாட் பிரசங்கச்
சுவைக்குநிக ராகுங் கொல்லோ
கத்துகடற் புவியகத்துக் கச்சோத
மொருகோடி கதிர்விட் டாலும்
உத்தமபாண் டித்துரையே யொருபரிதிக்
கிணையாக வுரைப்பார் யாரே. (௨)

தூரத்தே முகமலர்ச்சி காட்டியடுத்
தலுமின்சொற் சொல்லி மேவச்
சீரத்தே தேன்கலந்தாற் போன்றசுவை
யமுதூட்டிச் செல்வார்ப் போற்றி
வாரத்தே வருவிருந்து பார்த்திருந்தாய்
நல்விருந்தாய் வானுற்றா யெந்
நேரத்தே நினைக்காண்போ முக்கிரபாண்
டித்துரையா நிருப ரேறே. (௩)

எப்பொருளுந் தொகையாக்கி வகையாக்கி
விரியாக்கி யெழுதித் தந்தாய்
அப்படியே பிரசங்கம் பலசெய்தாய்
செய்யுள்வகை யனைத்துஞ் செய்தாய்
இப்படியில் வியாசனென்கோ நாவலனென்
கோகவிஞ னென்கோ நின்னைச்
செப்புமொழி யொன்றறியே னுக்கிரபாண்
டித்துரையாஞ் செல்வக் கோவே. (௪)

நீயியற்றுந் தமிழ்ச்சங்க மான்மியத்தை
நானியற்றி நேர்ந்த போது
சேயியற்றுந் தொழில்வியக்குந் தந்தையர்போற்
சிந்தைமகிழ் சிறப்ப வேநின்
வாயியற்று முகமன்மொழி மறப்பேனோ
வினியெம்முன் வருவாய் கொல்லோ
தாயியற்று மன்புடைப்பாண் டித்துரையே
தமிழ்வளர்க்குந் தனிக்கோ மானே. (௫)

அடுத்தாரை யுயர்த்துபெருங் குணப்பாண்டித்
துரையேநின் னருமை வாக்காற்
றெடுத்தார்வ முறக்கம்பன் கவிப்பொருளைக்
குறட்பொருளைச் சொல்லி வாழ்ந்தாய்
படுத்தாலு மிருந்தாலு நடந்தாலுந்
தமிழ்ச்சிறப்பெ பகர்வாய் அந்தோ
எடுத்தார்கைப் பிள்ளையெனத் தமிழைவிட்டு
விட்புகுந்தா யென்னே யென்னே ! (சு)

சங்கநிதிக் குரியவனே சங்கம்வளர்ப்
பதற்குநிதி தருதல் வேண்டும்
அங்கிதனை யவற்குரைப்பா ரிலர்நாமே
யுரைப்பாமென் றமர ரூர்க்குத்
துங்கமுறச் சென்றனையோ விருநிதியும்
போந்துநிதி சொரிந் திட்டாலும்
இங்குனக்கு நிகராமோ வியம்புகபாண்
டித்துரையா மிசைமிக் கோயே. (எ)

தென்னாட்டுச் சங்கத்திற் பன்னாட்டுப்
புலவரையுஞ் சேர்த்தா மந்தப்
பொன்னாட்டுப் புலவரையுஞ் சேர்ப்பாமென்
றன்னாட்டிற் புகுந்தாய் கொல்லோ
அந்நாட்டுப் புலவரைக்கண் டெமையுமறந்
துனையுமறந் தவணே யுற்றாய்
என்னாட்டும் புலவருட னுறைபாண்டித்
துரையே யீதென்னே யென்னே. (அ)

இங்ஙனம்,

எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்,

சோதுகுடி.

365

உ

புத்தக வரவு.

திருக்காளத்திப்புராணம்:— இது தெக்ஷிணகைலாசமெனச் சிறப்புப்பெயர்பெற்ற திருக்காளத்தியென்னும்சிவக்ஷேத்திர மான்மிய முதலிய கூறும் தலபுராணம்; வீரைநகர் ஆனந்தக்கூத்தர் என்னும் புலவராற் பல வடநூல்களிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்ற சொற்பொருட்பொலிவுள்ள 1724-தமிழ்ச் செய்யுட்களாலாக்கப்பட்டது.

இந்நூலிற் றலமகிமையேயன்றிச் சைவவொழுக்கங்களும், பொதுவொழுக்கங்களும், சரித்திரங்களும், பிறவும் உபதேசமுறையிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்நூல் பழையசங்கநூல்களும், பிற சான்றோர்நூல்களும், தலபுராணங்களும், பிறவுமாகிய பலபல தமிழ்நூல்களைப் பரிசோதித்துத் தமிழ்த்தழையைப் பதித்துவருதலையே பொழுதுபோக்காகக்கொண்ட மஹாமஹோபாத்தியாய பிரம்மஸ்ரீ-வே. சாமிநாதையரவர்களாற் பரிசோதித்து அச்சிற்பதிப்பிக்கப்பெற்றது.

இதனுள் முகவுரையும், திருக்காளத்தித் தேவாரமுதலிய திருமுறைகளும், திருக்காளத்தியின் மகிமையைப் புலப்படுத்தும் பிற தலபுராணங்கள் முதலிய பலநூற் செய்யுட்களும், திருக்காளத்தி நாதர் கட்டளைக்கலிப்பாவும், பதிகமுதலியனவும், அரும்பத அகராதி முதலியனவும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இனியெழுதிவைப்போரின்றிச் சிதல்வாய்ப்பட்டுச் சிதைவுறக் கிடக்கும் தமிழ்நூல்களை இவ்வாறு பரிசோதித்து அச்சிட்டுத் தமிழுலகுக்குதவித் தமிழைப் பாதுகாத்துவரும் ஐயரவர்களது ஒப்புரவாண்மைக்குத் தமிழுலகமென்னகைம்மாறு செய்யற்பாலது? "கைம்மாறுவேண்டாகடப்பாடுமாரிமாட், டென்னாற்றுங்கொல்லோவுலகு" எனத் தெய்வப்புலவர்கூறியதிருவாக்குப் பொய்யாமொழியாயினும் ஐயரவர்கள் பதிப்பித்த புத்தகங்களைத் தமிழபிமானமுள்ள ஒவ்வொ

ருவரும் வாங்கிப்படித்துப் பயனடைவதும், ஐயரவர்களின் உழைப் பறிந்து அவர்களிடத்து நன்றியறிதலுடையராதலும் அவர்களுக்குச் செய்யத்தக்க கைம்மாருகக் காணப்படுகின்றன.

இது நிற்க; செருக்கின்றிச் செல்வமுங்கல்வியுஞ்செறிந்து செய்வன தவிர்வனவறிந்த சிவபுண்ணியச் செல்வரான தேவிகோட்டை ஸ்ரீமாந்-மே. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களும் ஸ்ரீமாந்-மே. அரு. அரு. அருணசலம் செட்டியாரவர்களும் திருக்காளத்திநாதரது கற்கோயிற்றிருப்பணிசெய்து புதுப்பித்ததுபோலவே, அவரது சொற்கோவிலாகிய இத் தலபுராணத்தையும் வேண்டும் பொருளுதவிசெய்து பதிப்பித்திருப்பது ஆலயப்பிரதிஷ்டையுடன் தமிழ்ப் பதிப்பும் (பிரதிஷ்டையும்) சேரச்செய்து தமிழ்நூல்களை நிலைநிறுத்துவதற்கு முதலில் வழிகாட்டியதாகக்காணப்படுகிறது. இவர்களது தமிழபிமானம் இன்னும் மேன்மேல் வளர்ந்து தமிழபிவிருத்தி செய்து வருமாறு பன்முறை வேண்டுகின்றோம்.

ஹிந்துமததூஷணையின் பரிகாரம்:—இது ஸ்ரீமத் அந்நிபெஸண்டு அம்மையார் ஆங்கிலத்தில் எழுதியுள்ளபடி. மதுரை பிர்ம்மக்ஞான சபைத்தலைவர் ஸ்ரீமத். ப. நாராயணையரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றது; இரண்டாம்பதிப்பு. இதில் இந்துக்கள் விக்கிரக ஆராதனை, தேவர்களின் பூஜை, சிராத்தம் ஆகிய இக்கர்மங்களைச் செய்வது தவறாகாதென்று தத்துவார்த்தங்கள் சொல்லிப் பல திருஷ்டாந்தங்களாலும், யுக்திவாதங்களாலும் நிரூபிக்கப்பட்டிருப்பதுடன் "திரிமூர்த்திகள்," "கிருஷ்ணன்," "ஹிந்துமதம் சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் ஒற்றுமையாகவிருக்கிறது" என்ற விஷயங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் யாவரும் படிக்கத்தக்க தெளிவான நடையிலெழுதப்பெற்றிருக்கிறது. இது பிறமதஸ்தர்கள் இந்துமதக்கொள்கை சிறிதும் தெரியாதுசெய்யும் தூஷணைகளைக் குறைவுபடுத்துவதோடு இந்தியர்களும் பிறமதம் புகாது இந்துமதவொழுக்கத்தினின்றே எல்லா நன்மையும் பெறலாமென்பதை வலியுறுத்துகின்றது. இதன்விலை அணா 4. வேண்டுவோர் மதுரைப் பிர்ம்மக்ஞான சபைத்தலைவர்க்கெழுதிப் பெறலாம்.

ப—ர்.

புதுவருஷவருகை.

மங்கல மாண்போ டிங்குறு மிவ்வாண்
டெங்குநல் லாண்டா யினிதி னிலங்குக;
சென்றநா ளோடெஞ் செயன்மொழி சிந்தையில்
நின்ற தீதெலாம் பொன்றுக; இன்றுடன்
என்றுநம் அகத்துள் துன்றிநல் லுணர்வே
மன்றவொளிர்க; இம் மலர்தலை யுலகில்
எங்கும் நல்லவை யெழில்பெற் றோங்குக;
மங்குக அல்லவை பங்க முற்றே;
மல்குக ஞானய மருவிய புலவோர்;
பல்குக வின்பம் பல்லுயிர் மாட்டும்;
நல்குக வான்மழை; நாளும் பைம்பயிர்
புல்குக செழித்தே பூதல மெங்கும்;
வாய்மையே யோங்குக; மாய்கபொய்; நம்மிற்
சேய்மைய வாகுக சிறுதொழி லெல்லாம்;
வறுமை யாண்டும் வறுமையே யுறுக;
பொறுமை யாண்டும் பெருமையே பெறுக;
கண்டமிழ் தென்னக் கற்போர்க் கினிதாம்
தண்டமிழ் மொழியைத் தளரா ஊக்கமொடு
போற்றி வளர்க்கும் புகழ்சால் மதுரைத்
தமிழ்ச்சங்கச் செயல் தாவில் கீர்த்தி
மேவு மாலவாய் விமல னருளால்
யாவுங் குறைபா டின்றி யோங்குக;
நந்தலில் நற்பொருள் நாவலர்க் களிக்கும்

புதுவருஷவருகை

"செந்தமிழ்" நாளுஞ் சிறப்புடன் திகழ்க ;
"அரசருங் குடிகளும் அம்ம! வேறலர்
உரைசெயி னுயிருலா முடல்" எனற் கிணங்க
மன்னவ ரைந்தாம் ஜியார்ஜூம் மாட்சிசேர்
அன்னவர் துணைவிநம் மன்னை மேரியும்
பன்னரு நலமுறப் பாரினை யாண்டு
துன்னரு மின்பந் துய்க்க ; இவ் வையகம்
நன்கொடை யாளர் நனிமிக
வன்கலி தீர்ந்து வாழிவா ழியவே.

அரங்கநாதபுரம், **வே. மூத்துஸ்வாமி ஐயன்,**
பி.ஏ., எல்.டி.,

உ

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

இச்சங்கத்தார் 1912-௵ ஏப்பிரல் ௴ 15-ம் தேதியில் நடாத்திய ஆங்கில கலாசாலைத் தமிழ்ப் பரீக்ஷைகளில் தேறிப் பரிசும் யோக்கியதா பத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்.

யோக்யதா வரிசைநிர்.	ரிஜிஸ்டர் நிர்.	
		பீ. ஏ. பரீக்ஷை.
		I-வது வகுப்பு.
1.	139.	K. S. வீராஸ்வாமி, கிறிஸ்தவ கலாசாலை, சென்னை. (முதற்பரிசு ரூ 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)
		II-வது வகுப்பு.
1.	21.	A. G. சுப்பிரமணியன், S. P. G. காலேஜ், திருச்சி.
2.	140.	S. வையாபுரிப்பிள்ளை, கிறிஸ்தவகலாசாலை, சென்னை.
3.	141.	P. சண்முகம், ௸ ௸
		மெற்றிக்குலேஷன்.
		I-வது வகுப்பு.
1.	58.	T. V. கோதண்டராமன், முனிசிபல் காலேஜ், சேலம். முதற்பரிசு ரூ 30 (வெள்ளிப்பதக்கமும் மீதரூபாவும்.)
		II-வது வகுப்பு.
1.	184.	P. சபாபதி, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
2.	25.	R. P. சேது, செண்ட்சேவியர்ஸ் ஹைஸ்கூல், பாளையங்கோட்டை.
3.	129.	M. A. சிங்கராசாரி, இந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை.
4.	134.	ஈ. கு. சபாபதி, செண்ட்தோம் ஹைஸ்கூல், மைலாப்பூர், சென்னை.
5.	45.	K. C. பன்னிருகைப்பெருமாள், ஹையர்கிரேட் சக்கண்டரி ஸ்கூல், கோட்டாறு.
6.	90.	S. திருமலை அய்யங்கார், மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.

7. 59. S. R. நடேசன், முனிசிபல் காலேஜ், சேலம்.
8. 152. S. T. சம்பந்தம், பச்சையப்பன் கலாசாலே, சிதம்பரம்.
9. 82. M. J. சுப்பிரமணிய ஐயர், டவுன் ஹைஸ்கூல், கூடலூர், N. T.
10. 123. P. K. சமரபுரி பிள்ளை, வூர்ஹீஸ் காலேஜ், வேலூர்.
11. 112. M. K. இராமசேஷன், ஸ்ரீ மஹந்து தேவஸ்தானம் இந்து பாடசாலே, வேலூர்.
12. 38. T. P. பத்மனுபன், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
13. 43. K. சுப்பிரமணியன், ஹையர்கிரேட் சக்கண்டரிஸ்கூல், கோட்டாறு.
14. 17. T. கந்தசாமி, முனிசிபல் ஹைஸ்கூல், கரூர்.
15. 102. M. R. கோவிந்தசாமி, C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
16. 186. S. சுப்பிரமணியன், பின்டிலே காலேஜ், மன்னார்குடி.
17. 187. K. சௌந்திரராஜலு, ஷை ஷை
18. 4. M. வீரபத்திரன், அமெரிக்கன் உயர்தர கலாசாலே, மதுரை.
19. 98. V. மீனுக்ஷிசுந்தரம், இந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
20. 156. V. ரெங்காச்சாரி, முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
21. 29. N. மரியசஞ்சிவி, செண்ட் பிரான்சிஸ் சேவியர்ஸ் ஹைஸ்கூல், பாளையங்கோட்டை.
22. 148. A. வைத்தியலிங்கம், பச்சையப்பன் கலாசாலே, சிதம்பரம்.
23. 8. M. வெள்ளைச்சாமி, அமெரிக்கன் உயர்தர கலாசாலே, மதுரை.
24. 138. V. இலட்சுமிநாராயணன், முத்தியாலுபேட்டை ஹைஸ்கூல், சென்னை.
25. 96. T. ராமஸ்வாமி, இந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
26. 137. A. ஜீவரத்தினம், முத்தியாலுபேட்டை ஹைஸ்கூல், சென்னை.

P. S. சுப்பிரமணிய ஐயர்,
பிரஸிடெண்டு,
மதுரைத் தமிழ்ச் சங்கம்.

370

மதுரைத் தமிழ்ச் சங்கத்து

1912-வருஷம் எப்பிரல்மீ 1உ முதல் 30உ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

வரவு.	தொகை ரூபா.	அ.	ப.	செலவு.	தொகை. ரூபா.	அ.	ப.
1912ம் வருஷம் எப்பிரல்மீக்குரிய புதுக்கோட்டைசமஸ்தானம் மாதச்சந்தா வரவு ...	50	0	0	சங்கச் சிப்பந்திகளுக்கு சம்பளம் செல்லாக்கிய வகையிற் செலவு ...	481	9	0
செந்தமிழ்ச் சந்தா வகையில் வரவு ...	141	12	0	கலாசாலை மாணவர்களுக்கு ஆகாராதி போஷணைக்காகச் செல்லாக்கியது ...	60	14	9
பிரிண்டிங்ஆபீசு அச்சுக்கூலிவரவு 206—7—0				கலாசாலை உபயோகத்துக்கு வாங்கியபுத்தகம்...	5	3	0
சங்கம் ஆபீசு சம்மந்தமான அச்சுக்கூலி வரவு ... 125— 9—6				பைண்டிங் ஆபீசு ஸ்டேஷனரிச் செலவு 0— 2—9			
ஆக பிரிண்டிங் ஆபீசு வரவு ...	332	0	6	ஷை ஆபீசு ரயில்வே சார்ஜ் 0— 4—0			
பைண்டிங் ஆபீசு வரவு ... 45—11—0				ஷை ஆபீசு கண்டின்ஜென்ஸிச் செலவு 28—11—11			
சங்கம்ஆபீசு சம்பந்தமான பைண்டிங் வரவு ... 15— 4—6				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	29	2	7
ஆக பைண்டிங் ஆபீசு வரவு ...	60	15	6	பிரின்டிங் ஆபீஸ் ஸ்டேஷனரிச்செலவு60-4-6			

371

372

வரவு	விவரம்	ரூ	அ	பை	செலவு	விவரம்	ரூ	அ	பை
புத்தக விற்பனை வரவு ரூ ...		74	3	3	ஷெ ஆபீசு ஆயில்என்ஜின் சம்பந்தமாய் எண்ணெய்ச் செலவு	14—15—3			
சங்கம் காலிநிலம் மாக்கடை வாடகை நாளதுவிரோதிகிருதுஹு பங்குனிமீ த்துக்கு வரவு ...	55— 0—0				ஷெ ஆபீஸ் கண்டின்ஜன்விச்செலவு	5—10—9			
விளம்பர வகையிற் சார்ஜ் வரவு	3—12—0				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...		80	14	6
தவறிப்போன யோக்கியதாத்திரங்களுக்கு டூப்ளிக்கேட் காப்பி கொடுத்தவகையில்சட்டணவரவு	1— 0—0				போஸ்டேஜ் வகையிற் செலவு ...		29	6	0
1912ஹு பிப்பிரவரி, மார்ச்சுமீங்களுக்கு சங்கம் ஆபீஸ் இருக்கிற கட்டிடத்துக்கு வாடகை பாக்கி அனுப்பிய வகையில் வாபஸ் வரவு ரூ ...	2— 4—0				ரிபேர்வகையிற் செலவு ...		13	6	6
சங்கம் ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷை செலவுக்காக அனுப்பியதொகையில் மீதம் வாபஸ் வரவு ரூ ...	1—15—0				கலாசாலை வைத்திருக்கும் கட்டிடத்துக்கு சென்ற ஜனவரிமீ த்துக்கு வாடகை செல்லாக்கியது	18—0—0			
சென்னை ஒக்ஸ் கம்பெனியில் பைண்டிங் உபயோகத்துக்கு ஸ்டிச்சிங் கம்பிக்கு வி. பி. செலுத்தியிருந்த தொகை மணியார்டர் கம்மிஷன் நீக்கி வாபஸ் வந்த வகையில் வரவு ரூ ...	2—7 —0				சங்கம் காலிநிலம் மாக்கடைக்கு 1312-ம் பசலிக்கு லாண்டு ரிவினியூ செல்லாக்கியது ரூ ...	3—12—0			
					ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...		21	12	0
					லைபிரேரி உபயோகத்துக்கு வாங்கிய புத்தகம்		0	13	0
					சங்கம் ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷை செலவுகளுக்கு சென்டர் 14-க்கு மணியார்டர் மூலமும் ஆள்மூலமும் அனுப்பிய வகையிற்செலவு	25—13—0			

பிரின்டிங் செய்தனுப்பிய வகையில் போஸ்டேஜ் வி. பி. வரவு	0— 4—0
கலாசாலை இரும்புப் புல்லி ரிப்பேர் செய்த வகையில் வாபஸ் வரவு ரூ ...	0—14—0

விணுப்பத்திரங்கள் ரிஜிஸ்டர் செய்தனுப்பிய வகையிற் செலவு ...	4— 1—0
ஷை விஷயமாய் லாங்கிலாத்து மை மெழுகுதிரி, அரக்கு, வகையரு வாங்கியது ...	1—12—0
மாயவரம் சென்டருக்கு விணுப்பத்திரம் வகையரா நேரில் கொண்டுபோய் சேர்ப்பித்து வந்தவகையிற் செலவு ...	4—14—0
மதுரை சென்டரில் யேற்பட்ட பரீக்ஷை செலவு ரூ ...	2—0—0
கலாசாலை உபயோகத்துக்கு கரோசன் எண்ணெய், தாம்புக்கயிறு, இரும்புப்புல்லி ரிப்பேர் வகையிற்சிலவு	1-11-6
ஆபீஸ் ஸ்டேஷனரி கண்டிஜென்சி செலவும் மைஜாடி, மைபவுடர், வகையரு சேர்ந்து ...	3—8 —0
ரசீது லேபிள், மணியார்டர் புக், வண்டி வாடகை வகையரு ...	0—8—0
ஆங்கிலத்தமிழ்ப் பரீக்ஷை அதிகச் செலவுக்கு செல்லாக்கியது	0—14—0

373

				பிரிண்டிங் ஆபீஸ் பில்ப்படி சங்கம் ஆபீசு அச்சுக்கூலி வகைக்குச் செல் ரூ ... 125—9—6			
				ஷை ஆபீஸ் பில்ப்படி ஷை ஆபீஸ் பைண்டிங் வகைக்குச் செல் ரூ 15—4—6			
ஆக மேற்காட்டிய விவரப்படி வரவு ரூ	67	8	0	ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	185	15	6
ஆக மொத்தம் ரூ	726	7	3	*As per P.B. No. 263 of ஆகமொத்தம்செலவு	909	0	10
சென்ற மார்ச்சு௴ த்தின் கடைசித் தேதியில் நின்ற பாக்கித்தொகை ரூ ...	1003	7	8	Madura Co-oprative Stores-Rs. 810-14-1 போகபாக்கியிருப்பு	* 820	14	1
ஆக மொத்தம் வரவு ...	1729	14	11	With the Manager Rs. 10- 0-0 ஆக மொத்தம் ...	1729	14	11
ஆக மொத்தம் ரூ ...	1729	14	11	Rs. 820-14-1 ஆக மொத்தம் ...	1729	14	11

T. A. SUBBUVENKATARAMA IYER,
Manager.
6—5—12.

Audited and found Correct
S. GOPALASAMY IYENGAR,
9—5—12. *Auditor.*

நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்

பூரண ஆரோக்கியம்

என்பது யாதொரு வியாதியுமின்றி வெகுசுத்தமாய் அமைந்திருக்கிறது ஆகையினாலே எப்பொழுதாவது மாறுதல் ஏற்பட்டாலும் அல்லது அற்ப இடையூறுண்டாவதாய் நீங்கள் உணர்ந்தாலும் உடனே தற்கால பலவிருத்தி ஒளஷதமாகிய

ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களைத் தஞ்சமெனக் கைப்பற்றுங்கள்.

அதி சீக்கிரத்தில் இம்மாத்திரைகள் கொடுக்கக்கூடிய குணம் என்னவெனில், முதலாவது ஜீரணசக்தியை ஒழுங்கு படுத்துகிறது. இதைச் சீர்படுத்தியபொழுது உங்கள் சரீரத்திலுள்ள பாதிப்பிணிகள் நீங்கிவிடுகின்றன. மாத்திரைகளைத் தொடர்ச்சியாய் உபயோகித்துவரின் சீதோஷ்ண வேறுபாடு முதலிய காரணங்களால் உண்டாகும் சகல குழப்பங்களை நீக்குவதுமல்லாமல், பலவித தொத்து வியாதிகளையும் தடுக்கின்றன.

இந்த மாத்திரைகளைச் செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடிய எந்த பதார்த்தமும் உபயோகிக்கப்படுவதில்லை. இதன்றி அவைகள் தீங்கற்றவை.

ஒரு டப்பி மாத்திரையை முயற்சித்துப் பாருங்கள். விலை ரூபா ஒன்று தான்.

இன்னும் சவிஸ்தாரமாய் அறியவிரும்பினால் இனாமாய்க் கொடுக்கப்படுகிற எங்கள் **180** பக்கங்கொண்ட புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
22 பிராட்வே மதிராஸ்.

376

பல கண்காக்ஷிகளில் மேடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்

பி. சுப்பராய். ஆயுர்வேத ஔஷதசாலை

ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்கோவில் சந்நிதி, தஞ்சாவூர்.

9. **சர்வபடை சம்ஹாரன்:**—இடுப்பு, துடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி, ஓயாத நமச்சலைத்தந்து, வெகு சீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும், மேகப்படை, சொரி, சிரங்கு, தடிப்புப்படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை அணா 4. வி. பி. செலவு 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

10. **பேதி மாத்திரைகள்:**—வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய் பேதியாகும. அஜீரணம், பித்த உபத்திரவங்கள், சகலவாயு, மலச்சிக்கல், அக்கினிமாந்தம், வாதம், கை கால் முதலிய அவயவங்களின் குடைச்சல், வலி, சகல சுரங்கள் முதலியதுகளை சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு அணா 8, வி. பி செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

11. **ஜுவர சம்ஹாரி:**—தீராத நாட்பட்ட சகல சுரங்கள்,குளிர்சுரம், முறைசுரம், வாதசுரம், பித்தசுரம், அஸ்திசுரம், மாலைஜுரம், மார்வலி, காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்பு வெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறைசுரம், நாலாமுறைசுரம் முதலிய சகல சுரங்களையும் அடியோடு போக்கும். டப்பா 1-க்கு ரூபா 1, வி. பி. செலவு அணா 5-பிரத்தியேகம்.

12. **உரோமசம்ஹாரி:**-இந்த சூரணத்தை மயிருள்ள இடத்தில் தடவினால் வெகு எளிதில் மயிர்நீங்கி விடும். சீசா 1-க்கு அணா 4, ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

13. **சுகந்த பல்பொடி:**—நல்ல ஜீரணசக்தியைத் தரும். பல்வலி எக்காலத்திலும் வராது. பல் எக்காலத்திலும் விழாது. சீசா 1-க்கு விலை அணா 3. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையிலும் அணா 5 பிரத்தியேகம்.

14. **ஸ்கலித ரக்ஷணி:**—பலஹீனத்தினாலும், உஷ்ணத்தினாலும், சிற்றின்பத்தில் பால்யத்தில் நுழைந்து மூழ்கியிருந்த காரணத்தினாலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும் இந்திரியம் தானாகவெளிப்படுவதை நிற்பாட்டி தேகதிடத்தைத் தரும். சீசா 1-க்கு அணா 8 வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையிலும் அணா 5 பிரத்தியேகம்.

முக்கிய கவனிப்பு:—என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும், எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன் பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

371

(No. 1.)

THE TEST OF TIME!

FOR OVER THIRTY SEVEN YEARS

SCOTT'S EMULSION

has stood every rigid test that learned Physician could suggest.

LUNG TROUBLES,
COUGHS,
COLDS,
LOSS OF FLESH,
POOR APPETITE,

and as a Tonic and Tissue Builder for both Father and Son

NOT TOUCHED BY HND

FOR SALE AT ALL CHEMISTS.

SCOTT & BOWNE, LTD.

MANUFACTURING

CHEMISTS

LONDON, ENGLAND.

378

(No 2.)

CHAMBERLAIN'S COLIC, CHOLERA AND DIARRHŒA REEDY.

வயிற்றுக்கடுப்பு, வாந்திபேதி, சீதபேதி இவைகளுக்கு

சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த

மருந்து.

இதனால்

வயிற்றுவலி, அதிசாரபேதி, சீதபேதி, வாந்திபேதி, வயிற்றுக்கடுப்பு முதலான குடல் நோய்கள் பலவும் ஒழியும்.

இந்த ஆச்சரியமான மருந்து, உலகத்திலுள்ள மற்ற மருந்துகளைவிட மனுஷகோடிகளுக்குதவியாய் நின்று, நோயையும் வேதனையையும் நீக்கி அநேக ஆயிரம் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

இம்மருந்தை ஒருதரம் குடித்தாலும், எவ்வித கொடிய வயிற்றுவலியும் போய்விடும். பொல்லாத சீதபேதிக்கும், மூன்று தரம் குடித்தால் போதும்; அவ்வளவோடு வேதனை நீங்கும், வியாதியும் ஒழியும். எப்போதும் பலிக்கும் மருந்து, ஒருபோதும் தப்புவதன்று.

இது, மூலிகைகளால் ஆன மருந்து. கைபடாமல் செய்த மருந்து.

எங்கும் கிடைக்கும். சின்ன புட்டி ரு 1. பெரிய புட்டி ரு 2.